உ

கடவுள் துணை.

பதினெண்சித்தர்களில்

மகா மகத்துவம்பொருந்திய

## அகஸ்தியமகாமுநிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# வைத்தியவல்லாதி.

## அறுநூறு.

இஃது,

மதுரை புதுவை சென்னை

இச்சங்கங்களில்

தமிழ்த்தலைமைப்புலமைநடாத்திய

களத்தூர் - வேதகிரிமுதலியார் - குமாரர்

## ஆயுள்வேதபாஸ்கரன்

## கந்தசாமிமுதலியார்

அவர்களால் சிலபிரதிகளைக்கொண்டு

பிழையறப் பரிசோதித்தபடி.

## பரசுராமமுதலியாரால்

நமது-பரப்பிர்மமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

மூன்றாம் பதிப்பு.

கஅஎசஉ ஜுலைமீ.

ரிஜிஸ்டர்ட்காபிராயிட்.

பதினெண்சித்தர்களில்

மகாமகத்துவம்பொருந்திய

# அகஸ்திய மகாமுனிவர்.

திருவாய்மலர்ந்தருளிய

# வயித்திய வல்லாதியின் அகராதி.


| பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| அமிர்தகெந்திருக்கில வல்லாதி. | ௪ | ஏலாதிக்குளிகை | ௪௯ |
| | | ஐயநிதானம் | ௰ |
| அவஸ்தைபத்து; | ௰௫ | கற்பகருவுற்பத்தி | ௰௪ |
| அயனுதிவடகம். | ௰௮ | கன்னரோகத்திற்குத்தயிலம் | ௨௮ |
| அமிர்தசஞ்சீவித்தயிலம். | ௨௭ | கருங்குருவையரிசிச்சூரணம் | ௪௮ |
| அதிகரணத்தயிலம். | ௨௯ | கருங்கோழிச்சூரணம் வாதத்திற்கு. | ௫௧ |
| அரிதாரக்குளிகை. | ௪௧ | | |
| அதிசாரக்கிராணிக்குக் கவாடமாத்திரை. | ௫௪ | கருவளர்க்குமெண்ணெய் | ௫௫ |
| | | சரப்யானுக்கெண்ணெய் | ௫௪ |
| அஞ்சுசுன்னக்குளிகை. | ௮௨ | கடுக்காய்நெய் | ௫௯ |
| அயச்செம்பு, | ௯௫ | களிர்ப்பு | ௬௧ |
| இங்குளாதிக்குளிகை. | ௪௪ | கர்ப்பியுப்பு | ௭௰ |
| இதுவுமது | ௪௫ | கல்லுப்பு | ௱ |
| இரசசினிச்சூரணம், | ௫௧ | கதியுப்பு | ௬௬ |
| இதுவுமது வாய்வுக்கெண்ணெய். | ௫௪ | காப்பு | ௧ |
| | | காமாலை | ௰௮ |
| இதுவுமது ரசபற்பம். | ௬௫ | காசத்திற்குக்கண்டங்கத்திரிநெய் | ௬௰ |
| இரசப்பதங்கம். | ௬௬ | | |
| இரசவேக்காட்டிக்குக்கியாழம் | " | காசுகிறமெழுகு | ௱ |
| இதுவுமது பிள்ளைகட்குப்புகல. | ௭௫ | கிரிச்சுன்னங்களாறுக்கும்மெண்ணெய் | ௭௨ |
| உண்டிபிரிவு | ௰௫ | குளிர்சுரத்திற்கு அரிதாரக்குளிகை | ௪௧ |
| உள்ளியெண்ணெய். | ௫௫ | | |
| உதிரநோய்க்கு. | ௫௮ | குமட்டிக்காய்க்கடுகு. | ௫௮ |
| எரண்டத்தயிலம்நீரா பல்மகோதரத்திற்கும் | ௫௰ | குண்டலாதிக்குழப்பு | " |
| | | குஷ்டத்திற்குமெண்ணெய் | ௬௰ |

| | |
|---|---|
| குஷ்டத்திற்குமலைப்பாம்பெண்ணெய் | ௬௰ |
| குப்பிவைப்புச்செந்தூரம். | ௱௬ |
| கெந்தகவல்லாதி. | ௬ |
| கெடிசூரணக்குளிகை | ௪௫ |
| கெவுரிமெழுகு | ௮௪ |
| கெந்திமெழுகுசகலசரக்கும்வேதை. | ௮௫ |
| கெந்தகக்கட்டு. | ௯௪ |
| கெந்திபற்பம். | ௯௭ |
| கொம்மட்டிக்காய்குழப்பு | ௫௭ |
| சந்தனாதிதயிலம் | ௰௯ |
| சன்னிவாதத்திற்குஅமுர்தவல்லித்தயிலம் | ௨௪ |
| சர்ப்பங்கிவில்வாதிலேகியம் | ௩௮ |
| சண்டமாருதமை | ௩௯ |
| சகலசுரத்திற்குமாத்திரை | ௪௨ |
| சண்டரசப்பற்பம், | ௬௨ |
| சத்துகள்செந்தூரம் | ௬௮ |
| சலசரிமார்க்கம் | ௬௯ |
| சயத்திற்குமெண்ணெய் | ௭௩ |
| சகலவியாதிகட்கும் | ௭௪ |
| சகலநோய்க்குமெண்ணெய் | ௭௫ |
| சகலநோய்குட்டத்திற்குஎண்ணெய் | ௭௬ |
| சகலகுட்டத்திற்கும் | ௭௯ |
| சத்தியுப்புதீட்சை | ௮௫ |
| சவர்க்காரத்திற்குவெண்ணெய்விட | ௮௬ |
| சவர்க்காரப்பூநீர்வழலை. | ௮௮ |
| சவர்க்காரத்தெண்ணெய் | ௯௰ |
| சாரவல்லாதிக்குளிகை | ௰௭ |
| சாரம்நிமளைக்காரச்சுன்னம் | ௬௨ |
| சாபம் | ௱௪ |
| சீனவல்லாதி | ௩ |
| சீதேவித்தயிலம் | ௨௯ |
| சீதசுராங்கிஷக்குளிகை | ௪௰ |
| சீஷன்மனஞ்சோதிப்பு | ௬௭ |
| சுவாசத்தொகை. | ௯ |
| சுரத்திற்குமிருத்துவாதிக்குளிகை | ௪௰ |
| சுரத்திற்குஅஞ்சனமை | ௪௯ |
| சூதவல்லாதிசகலவியாதிக்கும் | ௨ |
| சூதசெந்தூரவேதை | ௮௯ |
| சூதக்கட்டு | ௯௨ |
| சூதசெந்தூரம் | ௯௩ |
| செங்கொட்டைச்சுத்தி | ௩ |
| செய்பிராத்தயிலம் | ௩௧ |
| ஞானம் | ௪௯ |
| தசநாடி | ௮ |
| தசவாய்வு | " |
| தங்கச்செப்பு | ௯௭ |
| தாளகபற்பம் | ௬௪ |
| தாளகக்கட்டு | ௬௫ |
| தாரச்சுன்னமிருதாரசிங்கிசுன்னம் | ௯௨ |
| தாப்பூரபற்பம் | ௯௬ |
| தில்லுப்பல்லாதி | ௬ |
| திரிநாடி | ௯ |
| திரிநாடிவிபரம் | " |
| திரிலோகவடகம் | ௰௯ |
| திருநேத்திரமை | ௪௨ |
| திருநேத்திரச்சூரணம் | ௪௯ |
| திருமூலர்கொங்கணர்பேசியது | ௱௩ |
| துருசுகுருசெயநீர் | ௮௧ |
| துரிசிஅயச்சூததாம்பூரம் | ௯௭ |
| துரிசிகுருவு | ௱ |
| நவமூலத்திற்குநெய் | ௫௫ |
| நவமூலத்திற்குஞ்சகலவியாதிகட்குமெண்ணெய் | ௭௪ |
| நாடிநிதானம் | ௮ |
| நாடிநடை | ௰ |
| நாடிமாத்திரைநிதானம் | ௰௧ |
| நாக்குசூலைக்குத்தயிலம் | ௨௪ |

| | |
|---|---|
| நாசிகாபரணம் | ௪௨ |
| நாளையென்பான் நாயகன்குளிகை | ௬௫ |
| நாகக்கட்டு | ௬௭ |
| நாகக்கட்டு | ௯௪ |
| நீற்றின்சரக்குப்பரீட்சை | ௮௭ |
| நூல்வரலாறு | ௧ |
| நூற்கோர்வை | ௰ |
| நூற்சார்பு | ௮௭ |
| நெய்க்கடுகு | ௫௯ |
| நெல்லிமுள்ளிலேகியம். | ௩௭ |
| நோய்வரும்வரலாறு | ௮ |
| பத்தியபாகங்கூறுகின்றார் | ௩ |
| பவுத்திரம்பிளவைக் குத்தயிலம் | ௩௨ |
| பத்தியவுப்பு. | ௫௩ |
| பரங்கிகுட்டத்திற்குவல்லாதி | " |
| பாப்புத்தயிலம் | ௭௮ |
| பாஷாணக்கட்டு | ௱௪ |
| பித்தநிதானம் | ௰ |
| பித்தத்திற்குஅமுர்தவல் லாதித்தயிலம் | ௨௯ |
| பீனிசத்திற்குநசியம் | ௩௪ |
| பூரணவல்லாதிதாதுக் குச்சூரணம் | ௰௫ |
| பூசினியெண்ணெய் | ௭௨ |
| பூவழலை | ௯௮ |
| பூபதி | ௱௯ |
| மரணக்குறிப்பு | ௰ |
| மகாசாரத்துலாதிகுளிகை | ௰௭ |
| மகாசந்தனாதித்தயிலம் | ௨௰ |
| மகாநயனசஞ்சீவித்தயிலம் | ௨௧ |
| மகாதிரிபல்லாதிதயிலம் | ௨௩ |
| மகாஎலாதித்தயிலம் | ௨௫ |
| மகாவில்வாதித்தயிலம் | ௨௭ |
| மகாசிந்தாதிலேகியம் | ௩௯ |
| மகாமிருத்துவாதிக்குளிகை | ௪௰ |

| | |
|---|---|
| மகாசுராங்கிஷிக்குளிகை | ௪௩ |
| மகாயிங்குளாதிக்குளிகை | ௪௪ |
| மகாநனலாலச்சூரணம அய வாதத்திற்கும் | ௪௭ |
| மகாகணலுருவச்சூரணம் | ௪௮ |
| மாந்தநெய் | ௬௰ |
| முன்சவர்க்காரச்சுன்னம் | ௯௰ |
| முப்பூவின்வியரம | ௱௧ |
| முப்புகுரு | ௱௨ |
| மூலவாய்வுக்குப்பால் | ௫௪ |
| மூலத்திற்குநெய் | " |
| மேகசூலைக்குயெண்ணெய் | ௭௩ |
| யாகசாலை. | ௮௰ |
| ராபதேவர்ஆயிரத்தில் வகாரங்காண்க | ௮௯ |
| லிங்கமெழுகு | ௮௪ |
| லிங்கமெழுகு | ௱௫ |
| லிங்கமெழுகுமால் தேவிவங்கக்கட்டு | ௮௪ |
| வல்லாதிசூரணம் பத்தியமில்லை | ௭ |
| வலிக்குநசியம் | ௩௯ |
| வயிற்வியாதிக்குநெய் | ௫௫ |
| வல்லாரைநெய் | ௫௯ |
| வாதநிதானம் | ௰ |
| வாய்வுகளுக்கு | ௰௭ |
| வாரசூலை. | ௩௫ |
| வாதத்திற்குப்பிட்டு | ௪௭ |
| வியாதிவரும்வரலாறு | ௨ |
| வில்லாதிலேகியம். | ௩௫ |
| வீரபற்பம | ௭௧ |
| வீரமெழுகு | ௯௧ |
| வெள்ளுள்ளிவுதிரநோய்க்குப்பற்பம | ௫௭ |
| வெண்காரக்கட்டு | ௯௫ |
| மேற்படி-சரத்துக்கெல்லாம் | ௪௩ |


அகராதி-முற்றிற்று.

உ

சிவமயம்.

பதினெண்சித்தர்களில்

மஹா மகத்துவம் பொருந்திய

# அகஸ்தியமஹாமுநிவர்.

திருவாய்மலர்ந்தருளிய

# வைத்தியவல்லாதி.

## அறுநூறு.

### காப்பு.

ஆதியாமகண்டபரிபூரணமாய்நின்ற - அண்டபராபரமானவைங்கரனேகாப்பு, சோதியாமறுமுகவன்பாதங்காப்பு - துரியவெளிதனில்நின்றசுந்தரியேகாப்பு, வாதியாமென்குருவின்பாதங்காப்பு - மகத்தானபெரியோர்கள்சரணங்காப்பு, பேதியாம்வயித்தியந்தானறுநூறுகப் - பேசுகின்றேன்வாணிபதம்போங்காப்பே, (க)

### நூல்வரலாறு.

காப்பென்றவல்லாதிசாற்றுமாதி - கருவானவழலைசவர்க்காரச்சுண்ணம், நாப்பென்றபற்பமொடு தயிலமெண்ணெய் - நாடியொருவியாதிவருங்காட்டந்தானும், தாப்பென்றகுட்சாதிமருந்துமல்லாற் - சாற்றுகின்றேன்வடகமொருகுளிகைதானும், கோப்பென்றயாகஞ்செய்சாலையோடுகுறிப்பானகிரந்தங்கள்கூறுவேனே. (உ)

கூறுவேன்வேதியங்கள்சூரணங்கள் - குறிப்பானசெந்தூரங்கள்பாகங்கள், தேறுவேன்உலகத்தோர்பிணிகள்தீரச் செப்பினேன்தெரிந்து செய்யத்தீரும்நோய்கள், சீறுவேன்பொருள்மேலிச்சைப்பட்டு - தீருதவியாதிதன்னைதீர்ப்பேனென்று, ஆறுவேன்கைப்பொருளுக்கிச்சிபாதே - துன்பத்துக்காளாகிசுழன்றிடாதே, (௩)

சுழன்றலையும்பாவிக்கோ சொன்னேனின்னூல் சுத்திரமேஞானநூல்துடர்ந்துபாரு தெளிர்ந்துபலநூல்பார்த்துவயித்தியம்பாரு - தேசத்தின் நல்லவரோடிணக்கம்பண்ணு, வழிந்துவிடுங்காமநோய்க்குள்ளா

ய்நின்று-மங்கையர்கள்கற்பழித்துமகிழ்ந்திடாதே, ழிந்துமணம்போகாமல்நிலையில்நில்லு-அடக்கமாயின்னாலே அறையுறேனே. (௪)

## வியாதிவரும்வரலாறு.

அறையுறேன்விந்தழிந்தால்மேகமாச்சு - அழுதளிந்துருகுகொண்டால்வாய்வுசேரும், பறையுறேன்சூல குஷ்டங்கிரந்திப்புத்து-பவுத்திரங்கள் பிளவையொடுகண்டமாலை, அறையுறேன் அனாயாப்புவெட்டியப்புண்ணும் அருக்காப்பன் சிரங்குகுன்மமலநீர்க்கட்டுங், குறையறவே நீர்க்கொண்டு சயநோய்க்காசங் - குடிலமாம்பேதியொடு கிராணிப்பாண்டே. (௫)

பாண்டுடனேகாமாலைபீனிசங்கள்-பரிந்துவந்துசேருமடாபலநோயின்னம்; தாண்டுமிந்துமேகத்திலையபித்தம்- தான்சேரின்மனத்தில்சாரும்நோய்கள், மூண்டிடுமேவாதமெனில் நீரிழிவேயாகு-மூத்தமனேபித்தவலிற்சுரமேதோன்றும், கூண்டுதடுமாறுமலிருக்கமாட்டார் குரும்பரோமன்னுடலுங்குலைந்துபோமே. (௬)

குலைந்துவிடுமேகத்தாலெழுந்தரோகங்க -ளுடல்வாதந்திமிர்வாதங் குண்டலமாம்வாய்வு, உலைந்துவிடுந்தளவாதம் பச்சைவாதம்- உள்ளடுக்கல்லரித்தலையாம்வாதத்தோடு, அலைந்துவிடும்பலவாதமெல்லாந்தீரச்-சூதவல்லாதியென்றுசொல்லக்கேளு, அலைந்துவிடுஞ்செங்கொட்டைபழுதுபோக்கி-அப்பனேவிராகனிடையிருபத்தினாலே. (௭)

## சூதவல்லாதி சகலவியாதிக்கும்.

பத்தியென்றகுரோசாணிவிராகனிடைரண்டு -பாருலர்ந்தசதாவேரிக்கிழங்குரண்டு, வெத்தியுள்ளசிலைப்பனையின்கிழங்குரண்டு வெயிலுலர்த்திச்சூரணித்துசீலைவடிகட்டி; கத்திபெறக்கல்லுரலிலிட்டுப்பின்னை கட்டைபாறைத்தன்னாலே ரண்டுசாமம், சித்தியென்றசெங்கொட்டையொவ்வொன்றாகச்-சேர்த்திடித்துச்சூக்ஷமதில் பூரம்ரண்டே. (௮)

இரண்டிட்டுசேர்த்திடித்துமைபோலானால் -இருபத்திரண்டுருண்டைப்பிடித்துக்கொண்டு, உருண்டதனையான்றனக்குவைத்துப்போற்றி - யொன்றைவிட்டிருபத்தொன்றெடுத்துக்கொண்டு; திரண்டபிணியாளருக்குயேழுருண்டை - தின்னவேபத்தியந்தான்செப்பக்கேளு; இரண்டசிறுபயறுடனேகோழிமுட்டை-திறமான துவரையென்றபருப்புசெய்யே. (௯)

பருப்புடனேபாலாகுமைத்தாகாளில் பாலகனேவறுத்தவுப்பு சத்தேகூட்டு சாப்புவாய்வழியோடுஞ்சூலைகட்டு சொல்லுவேன்மூல்லைவர்

தநீரினாலே, கருப்பமாய்க்கொப்பளித்துவெள்ளாட்டென்ற-னைதலைதா
ன்வெந்நீர்க்கியாழங்கன்னே, விருப்பமாய்க்கொப்பளித்துக்கரியுங்கூட்
டில் விதமானவாய்ச்சூலையேகுந்தானே. (௰)

ஏகுமேயெட்டாநாளேரண்டத்தெண்ணெய்- இட்டுநீமுழுகிடவே
யேகுமநோய்கேள்; சாகுமேகிரந்திகுட்டம்சூலையனையாப்புச் - சந்தில்
வரும்பவுத்திரங்கள்பிளவைப்பத்து, ஏகுமே விப்புருதிகண்டமாலை -வி
தனஞ்செய்வாதமெல்லாம்விணாந்துபோகும்; தேகுமேவலித்துதடாபத்
தியமேவேண்டுஞ்சீனவல்லாதியொன்றுதெளிந்துகேளே. (௰௧)

## சீனவல்லாதி.

தெளிவானசீனமென்றபட்டையோடு செங்கொட்டைவெள்ளுள்
ளிபேரீச்சங்காய், சளிவானயெள்ளுவகைபலந்தானாறு- சொல்லுகிறே
ன்மேல்மருந்துசுக்குவோமம், றெளிவானகுரோசாணி மிளகுமஞ்சள்-
நீலமானமரமஞ்சள்சித்தரத்தைமல்லி,ஒளிவானகுங்குமப்பூசித்திரமூல
ப -உயர்தேசாவரங்கிராம்புசாதிக்காயே. (௰௨)

## செங்கொட்டைச்சுத்தி.

சாதியென்றபத்திரியுங் கடுக்காய்ச்சீரம்-தான்கரியசீரகமுந் தான்றி
க்காயும், ஆதியென்றசிறுதேக்குகஸ்தூரிதா -மனுரவின்கோரோசனையு
ம்வகையொன்றுக்கு, நீதியென்றவிராகனிடைரண்டுந்தூக்கி-நோகயெ
டுத்துவஸ்திரகாயஞ்செய்து; வாதியென்றசெங்கொட்டைசுத்திசேளு-
வகையானசுண்ணாம்புக்கல்லில்தீற்றே. (௰௩)

தீற்றுவதுகாடிவிட்டுதீற்றிக்கொண்டு - நினைவாகக்குளிர்சலத்தால
லம்பிப்போட்டு, ஆற்றுவதுமேதியடச்சாணிப்பாலி லடவானபுளியிலை
யங்கிபாழந்தன்னில்; மாற்றுவதுபூசம்பூக்கியாழத்தோடுவகையோமக்
கியாழத்திலாவின்பாலில், கோற்றுவதுகியாழம்பால் சொதிக்கையிலே
விட்டு குளிர்த்தபின்புகழுவியெடுசுத்தியாச்சே. (௰௪)

சுத்திசெய்துவறுத்துக்கல்லுரலிலிட்டு தூடியாகயிடிக்கையிலேமு
ன்பொடியைத்தூவு, வெத்தியதுபனைவெல்லம் பலந்தான்பத்துவெள்
ளுள்ளியெள்ளுடனேபேரீச்சங்காய், பத்தியதுஆவின்னெய்படிகாலப்
டா பரிவானதேனதுவும்படிகாலாகு, மூத்தியாம்விட்டாட்டிமயினம்
போலாம், மும்மதத்தோன்முன்னேவைத்துப்பூசைசெய்யே, (௰௫)

## பத்தியபாகங்கூறுகின்றார்.

பூசைசெய்துண்டலந்தானெல்லிக்காய்வீதம்- புகழாகவந்திசந்தி
கொள்ளும்போது, தேசமெய்ச்சுமருந் திதுநான்பத்தியத்தைக்கேளு
ஞ்-சிறுபயிறுபசுவின்பால்தயிர்நெய்யாகும், வாசமொத்தத்துவரையுட

பருப்புமாகும்-மைந்தனே புடலங்கா யவரைக்காயாம் - நேசமொற்றமு
ருங்கக்காய்சிறுகீரையாகும்-நெல்லிக்காய் தானுவளை பருப்பாம்பாரே. ()

பாரான வெள்ளாடுசுறுமீன்காடை -பரும்விறாலுடும்புடனேமுய
லுமாகும், வாரானகரப்பனென்றவஸ்துவாகா- மங்கையரைக்கூடாதே
யிளகாய்மாத்து; போனகுலைபதினெட்டும்போகும்- பெருங்கிரந்திப்ப
தினெட்டுகுட்டம்போகும், மோரானகரப்பன்களிருபத்தொன்றும் மே
கத்தின் ஹறலெல்லாம்வெகுண்டுபோமே. (௰எ)

போமென்றபவுத்திரங்களு நிரவாய்வு பொல்லாத குலைமுட்டும்பிள
வைப்புக்கு, ஆமென்றவாதமெல்லாமகன்றுமேலாக-மப்பனே நிரோகமது
யிறுகும்பாரு தாமென்றதாதுநஷ்டமிந்திரியங்கட்டுஞ் சங்கையில்லா
தோடமடாதாக்கிப்பாரு, நாமென்றபாபரனுரைக்கச்சொன்னார்-நாட்
டோர்க்குநாமுரைத்தோம் நயந்துபாரே. (௰அ)

## அமுர்தகெந்திக்குக்கில்வல்லாதி.

பாரப்பா அமுர்தகெந்திக்குக்கில்வல்லாதி-பாடுகிறேன் கெந்தகந்தா
ன்பலந்தானெட்டு, வாரப்பாபாண்டத்திலுரிதன்னை-வாய்தனிலேவே
டுகட்டிகெந்திகனைப்பரப்பி, நோப்பாமேல்மூடிச்சீலைமண்செய்து சிரந்
தரமாய்க்குழியில்வைத்துவாய்த்தெரியமூடி,சீரப்பாமண்ணிட்டுமேல்பு
டத்தைப்போடு-சீதளமாய்க்குளிர்ந்தபின்பு யெடுத்துக்கொள்ளே. (௰கூ)

எடுத்ததனைக்குளிர்ந்தசலத்தாலலம்பிப்போட்டு யிருள்ளிச்சாற்றி
ல்முன்போற்புடத்தைப்போடு - அடுத்ததனை ஆவின்பால்தன்னிற்போ
டு- ஆலைக்குட்டித்தக்காளிச்சாற்றிற்போடு, விடுந்ததனை சிறுகீரைசாற்றி
ற்போடு- விளங்குமயிலாஞ்சி கைத்தயிரிற்சேர்த்துக், கடுதகசனை மூன்
போலே புடத்தைப்போடு கனகம்போல்கெந்தகந்தான் சுத்தியாச்சே. ()

ஆச்சப்பாகுக்கிலுமேபலந்தானெட்டு அழகானவேம்புமுதற்பட்
டைதன்னை, காச்சப்பாகிபாழத்தில்குக்கிலமூடித்திட்டுக்-கட்டுமது ஆறு
மல்மூன்றுநாள்வை, பாச்சப்பாபின்னெடுத்துக்குளிர்ந்தசலம்விட்டுப்-
பதறுமல்பிசைந்துநன்றாயிறுத்துப்போட்டு,வீச்சப்பா ஆவின்மோர்படி
தான்விட்டு-விளக்குப்பூச் சாற்றனைதான்காடிகூட்டே. (௨௧)

காடிப்படியொன்றப்பாகளேழுநீர்க்-கசப்பெல்லாம் வாங்குமட்டாக
முழப்போடு, நாடியேயாவின்பாலபடியிற்போடு - நலமாகக்கொதிக்க
வைத்துயுலர்த்திப்போடு, தேடியேயாவினிடநெய்தான்விட்டு- சிவக்கவ

றுத்தெடுத்திடுவாய்பலமூநாலு, நாடியே அமூர்தசர்க்கரைதாநாலு- நல்ல சுத்திசெய்துகொட்டைவறுத்துநாலே. (௨௨)

நாலுபலங்கழுவியெடுத்துலர்த்தவெள்ளு-நல்லசெந்திசுத்திசெய்து நலமாய்க்கேள், பாலுசிறமானதொருபாக்கிப்பட்டை பாச்சடாவகையும் ரண்டுபலந்தான்மூன்று, மேலும்வகை யெழுகுபலமுப்பதாச்சு, மேல்மருந்துசொல்லுகிறேன் விரைந்துகேளு; கோலமெனுங்கொடிவேலிவேரின்பட்டைக், குறையாமல்பலமிரண்டுகூறக்கேளே. (௨௩)

கேளப்பாவாலுளுவையரிசிகோஷ்டங்-கொடிதாணவால்மிளகுபேரீச்சங்காய், வேளப்பாசடமாஞ்சிசிவனார்வேம்பு - வெட்டிவேர்வெள்ளறுகுசங்கன்குப்பி, தாளப்பாதிரிகடுகுசிறுநாகப்பூ- தக்கோலஞ்சீரகமுந்தாளிசையும், நீளப்பாநன்னாரிநெரிஞ்சிமூனளு -நிலப்பனையுந்தண்ணீர்மிட்டான்சொற்றமல்லியாமே. (௨௪)

ஆமடாகல்மதமுங்கல்லுறோல-மப்பனே - திரிபலையுக்கருவாப்பட்டை, ஓமடாகார்போகஞ்சித்தரத்தை-யுற்றகருஞ்சீரகமும் வகையொன்றுக்கு, தாமடாபலமொன்றுசூரணமேசெய்து தாக்கடாகல்லுாலிற்சாமம்நாலு, நாமடாபனைவெல்லம்பலத்தைக்கேளு- நாற்பத்திரெண்டுவிட்டுயிடித்துக்கொள்ளே. (௨௫)

இடிக்கையிலே தேனாறு பலந்தானெட்டு - என்மகனேமயினம்போலெடுத்துக்கொண்டு, பிடிக்கையிலேகான்றிக்காயளவுகொள்ளு பிசகாதுமண்டலத்தில்தீரும்நோய்கள்-படுக்கையிலேகிடந்தவைகால்முடக்கமெல்லாம்பறக்குமடா-ரெத்திகுஷ்டம்சூலைவாய்வு, எடுக்கையிலேபுண்புரைகள்வாதமென்ற-தெண்பதுடன்யவுத்திரங்களேகுந்தானே. ()

ஏகுமேஉட்குத்துமாரடைப்பு -யென்னசொல்வேன்காப்பனுெயோனிப்புத்து; சாகுமேகுசிகாகிராணிகுன்மம்- தரியாதுகெற்பத்திலெமூக்கரோகம் போகுமேகண்ணேசிகண்டமாலை -பொல்லாததுனையாப்புருத்திரவாய்வு, வேகுமேஞசீகாபீடமல்லால்-விப்புருதிபிளவையும்விட்டோடுந்தானே. (௨௭)

ஓடுமேப்பிங்காதமார்பிலாணி-புனைக்கவென்றால்முடியாதுவுபாத்திமெத்த, வீடுமேபிலத்துகடாபத்தியங்கேளு - வெள்ளாட்டுவற்றலுடனவரைப்பிஞ்சு, தேடுமேமுருங்கைக்காய்ச்சிறுபயறுமாகுஞ்சிறந்தபுடல்நெல்லிக்காயவரைக்கீரையாகும், நாடுமேதுவரையுடபருப்புநெய்யு நல்லாவின்மோருகுநாடிக்காணே, (௨௮)

## கெந்தகவல்லாதி.

நாடியேயின்னமொன்றுநவிலக்கேளு - நற்கெந்திவல்லாதிநாடிக்
காணுங், தேடியேகெந்தகந்தான்பலமூன்றப்பா- சிறப்பானசெங்கொட்
டைபலமேரண்டு, சூடியேசெண்பகப்பூபரங்கிப்பட்டைச்- சொற்சாதி
ப்பத்திரியுங்கடுக்காயேயாமஞ், ஆடியேசங்கன்வேர்சிறுகிளாவேர் - ஆடு
திண்ணாழலிசங்கன்குப்பிமேனே. (௨௯)

வேருணவிலவாகைகிராந்திதானும்-மிளகருணை அசுவகெந்தமிலவங்க
ப்பட்டை, பெருனதலைச்சுருளிமிளகுசுக்கு - பெருமருந்துப்பட்டைபி
ருயன்பட்டைகோஷ்டம், சீருனகாட்டுநெல்லிகொல்லங்கோவை சிரக
மூஞ்சித்தரத்தைஜாதிக்காயுந், தாருணநெல்விமூள்ளிலவுங்கப்பத்திரி-த
வசிபென்றமுருங்கைவேற்தான்றிக்காயே. (௩௰)

காயானதிப்பிலியுஞ்சித்திரமூலங் கனத்தகோரோசனையுங்கரியசீர
கமூங், தியானசிறுசெருப்படையுமவேறுஞ் செப்புவேனவமூலிப்பல
மொன்றப்பா, ஓபாமலுலாத்தியதை நிறுத்திக்கொண்டு - வுந்தமனைக
டைமருந்தனைப்பலமதாகுஞ்; சாயாதேயிடித்துவஸ்திரகாயஞ்செய்து
தவறுமலிடித்திடுவாய்ச்சாமம்நாலே. (௩௧)

சாமமதுயிடிமயினமாகும்போது சர்க்கரைதா நாலுப்த்துபல்மே
போடு, சேமமதுதேன்படிதானென்றுவிட்டுச் சேரவேயெடுத்துப்பீங்
கானில்வைத்து, ஷேமமதுநெல்லிக்காய்வீதமாக யீசனுக்குப்பூசைமண்
டலமேகொள்ளு; ஏமமதுபோலாகுங்கிரோகந்தானு மென்னசொல்வே
னோய்போகும்பாக்குத்தானே. (௩௨)

போக்குமேதிமிர்வாதமண்டைச்சூலை - புத்துடனேவெடிசூலைக்
பாலசூலைச்-தீக்குமேமருள்கிராந்தி கரப்பான்குஷ்டர்- திரண்டெழுந்தபி
ளவையுடன்சிழ்மூலங்கள், நீக்குமேபலவிதனங்கண்டமாலை நீங்காத
வாதமொடுகெற்பச்சூலை, கேட்குமேயனையாப்புபவுத்திரத்தைக் கேள்
தண்டுசூலையோடுலிங்கப்புத்தே. (௩௩)

லிங்கத்திலெழுந்ததொருமேகமெல்லாம் - நில்லாதபத்தியத்தைநி
சமாய்க்கேளு, சங்கொத்தவுப்புதனைவறுத்துக்கூட்டு- தவறுதேதுவரை
யுடபருப்புநெய்யும், நங்கொத்தமாங்கிஷங்களாகாதொன்றும் நாடாதே
காப்பேனென்ற பதார்த்தந்தன்னை, சிங்கத்தைவெல்லவதற்குப்பேலனுண்
டாகும் தீராதநோய்பலவுந்தீருந்தானே. (௩௪)

## தில்லுப்பல்லாதி,

தானென்றதில்லுப்பல்லாதிகேளு - தப்பாதேவெள்ளதுவம்பலந்
தானேந்து, தேனென்றசெங்கொட்டைபலந்தானேந்து சிறந்தநல்லவெ

ல்லமதுப்பலந்தானேத்து; வேனென்றவுரலிலிடிமயினம்போலே-வெருக
டிதான்மண்டலமேகொள்ளுகொள்ளு, ஊனென்றகிரந்தியொடு சூலை
யெல்லா-மோடுமேபத்தியந்தானுனாக்கக்கேளே. (௫௫)

கேளப்பாவாய்வானபதார்த்தங்கள்ளு-கிருஷையாய் மங்கையனாக்
கூட்டிடாதே, காளப்பாமற்றதெல்லாமாகுமாகும் -நாடாதேமிளகாயுமி
ளகினேடு, தேளப்பாகொட்டதுபோல்நோவைக்கொட்டுஞ்-சிவன்சொ
ல்லஆயிசொன்னுள்தெளிந்துகாணு, நீளப்பாசிந்துவல்லாதிதன்னை-நீந
ன்றாயக்கேளப்பாவினைவாய்த்தானே. (௫௬)

நினைவாகப்பழம்புளிதான்பலமேநாலு-நிறையவேசெவ்கொட்டை
ப்பலந்தாகாலு, கனமானமுருங்கிலைபின்றுளிரு மூன்று-கட்டானசரியு
ப்புப்பலமோரண்டு, தனமானவெண்காரமப்பலமுமூன்றுகப்பாதேவெடி
யுப்புரண்டுதானுந், தினமாசவுரலிலிடி மயினம்போலத்- திரட்டிநீசுண்
டக்காயளவுகொள்ளே. (௫௭)

கொள்ளவேநீரடைப்புபவுத்திரசூலை சூடிகெடுத்தசல்லடைப்புகு
ன்மவாய்வு, மெள்ளவேகுடல்படுவன் அண்டவாய்வு விழலானவுதசய
டைப்பன்வுதிரவாய்வு, இள்ளவேமறைந்திருநதொருநீர்கோர்வை-கே
ட்டுமடாகாந்தத்தைச்சேர்த்துக்கொள்ளு துள்ளவேவந்தநோய்த்துலைந்
துபோகுஞ்சுந்தரிக்குயீசனன்று சொன்னவாறே. (௫௮)

வல்லாதிசூரணம்பத்தியமில்லை.

வாறானவல்லாதிசூரணத்தை மைந்தனேசொல்லுகிறேன்மகிழ்ந்
துசேளு, பேறானகண்ணீர்மிட்டான்கிழங்கினேடு -பெருங்கிழங்குகில
ப்பனையமூலர்த்திக்கொண்டு, கூறானபாங்கியிடதேசங்கன்னிற் - குலா
வுநின்றமுருங்கையுடப்பிசினுங்கூட்டி, ஆறானருரஸ்துவென்றுசொ
ல்வார் அதுவனைக்குவிராகனிடையீறாமே. (௫௯)

ஆமென்றசெவ்கொட்டைவிராகனிடைசேளு-அப்பனேவிரொட்டு
வசடுபோக்கி,ஓமென்றநாய்க்கடுதுகுரோசாணியேகாம-முடமினுகிருமி
கிருமாணியோமம்; நாமென்றவகையைந்து விராகனிடைபெட்டு -ரச
மென்றுபனைவெல்லநாலாறுகும், தாமென்றாருந்துவகை பதினென்
றுந்தான்தா நூறு அம்பதுவிராகனிடையாச்சே. (௬௰)

ஆச்சிந்தமருந்தையிடியாறுசாமம்-மகிழேனடுவெற்றிலையின்சாம்பஞ்
சாநூறு, மூச்சிந்தசூரணத்தையெடுத்துக்கொண்டு மூமமதத்தோன்மு
ன்வைத்துப்பூசைபண்ணிப், பாச்சிந்தவெருகடிதான்வாயிலிட்டு பண்
பாகக்குளித்தமோர்குடிக்கச்சொல்லுபோச்சிந்தசூலையொடு கிரந்திகுட்
டம், பொல்லாததிமிர்வாய்வுபோகுந்தானே. (௬௧)

போகுமேயரையாப்புமேகவாய்வு, புத்தடனே காப்பனுமேபிள
வையேது ஏகுமேபவுத்திரங்கெளரணங்களெல்லா மேமூதினந்தானரும்

தசருக்குமேற்ற, ஆகுமேபத்தியங்களில்லையில்லை, ஆகாதவஸ்துவெல்லாமருந்தவேண்டாம், நாகுமேதரித்தபிரானுமைக்குச்சொன்னார், நாரணனையும்பொன்றுகாட்டொணாதே. (௪௨)

## நோய்வரும்வரலாறு.

நாடுவாய்நோய்வருவதேதென்றக்கால் நவிலுவோமதிபோகச்சலைச யோகத்தால், சூடுவாய்மெய்மூணடாய்வாய்வுசேர்ந்து, சோரவேநோயாச்சுதிடமும்போச்சு, கூடுவார்கெற்பத்திற்புணர்ச்சிமீறகொல்லுமடாநோய்ப்பாவங்கூறக்கேளு- கேடுவார்தேகமதுவெண்சாணளம், செப்புரோமக்குலந்தான்தொண்ணூற்றாறே. (௪௩)

## நாடிநிதானம்.

தொண்ணூற்றாறுதத்துவத்தின்மூலத்தன்னிற்- சொல்நாடியெழுபத்தீராயிரந்தான், தசநூற்றுமிதில்நாடிபத்துமாகும்-தப்பாதுயிருமூன்றுதாககிப்பாரு; விண்ணூற்றியெழுபத்திராயிரந்தான் - மிகுந்தநேயத்தவிழசுருக்கம்விரைந்துபாரு; எண்ணூறறிந்தேதானைணூறையஞ்சிமேலேற்ற-மிதுவகையிற்றசநாடிப்பகுத்துக்காணே. (௪௪)

## தசநாடி.

காணுவாயிடைசுழினைபிங்கலையிவேடு- காந்தாரிசிங்குசங்கினியசுவியோடு, பூணுவாயலம்புருடன்சிகுவையுமல்லாற் - புகழுமிவர்செய்தொழிலும்பொருந்துமிடங்கேளு; காணுவாயிடதுகாலங்குட்டத்திருந்து-கத்திரிமாறுயிடதுநாசிந்னிறமாயும், பேணுவாய்பிங்கலைதானிடதுகாலின்பெருவிரலிலிருந்துகத்திரிமாறலாமே. (௪௫)

ஆறுணவலதுநாசிசேலிற்சாரு - மப்பனேசுழிமுனைமூலத்திருந்துமேலே, வீறுண ஆக்கினையுமட்டுமபாய்ந்து-விதுநாணுபுச்சிலந்திநூலொளியாகும், மேடறுணசிவ்நாநலையுண்ணாக்கினின்று - பேணியுண்ணுணவத்தைதகிழ்பாய்ச்சும், சோறுணபுருடனாவலதுகண்ணிற் - சோதியுடன்பார்வைகொடுக்தொழில்கண்டே. (௪௬)

தொழிலான காந்தாரியிடதுகண்ணிற் - சோதியுடன்பார்வைதருஞ்சூட்சமாகும், செழிலான அசனையாவலதுகாதில் நிற்குமடா அலம்புருடனிடதுகாதில், குழலானசங்குனிலிங்கத்தில் நின்றுகொடிபோலச்சுற்றுமடாகூறினேனென்; எழிலானகுகுதன்பானத்தைக்கொள்ளுமியம்பவே திசைவாய்வைவிசைகதுவே. (௪௭)

## தசவாய்வு.

இசைந்துகேள்பிராணனுடனபானந்தானு- மெழிலானவியானனுமுதானன்கூற்மன், அசைந்துகேள்தேவதத்தன்சமானநாகன்-ஆனதிரிகரணன்றனஞ்செயனிவர்கள்பத்தாம்; பிசைந்துகேள் பிராணன்மூலத்

இருந்து, பின்கலையோடிடைநடுவாய்கையில்மட்டும், பசைந்துகேள்மு
டியாது நாசியூடு பன்னிரண்டங்குலம்பாயும் பாழாம்நாலே. (௪அ)

சுவாசத்தொகை.

நாலேதுவக்கெட்டுள்ளேபாயும் நாழிகைக்குழுந்நாற்றிருபகாகும்; ஏலேதுநாளொன்றிற் சுவாசங்காணு மிருபத்தோராயிரத் தறுநூறப்பா, மேலேகும்பிராணனெஞ்சில் நின்றுபோகும விளங்குமேதிரிகன்றும் ப லையுண்டாக்கும், காலேகுக்குருத்துடனபானனின்று கழிக்குமேமலசு லத்தைக் கருதிப்பாரே. (௪௯)

பாரடாநாடிதனிற்சமானனின்று பருகியதோரன்னத்தைத்செரிக் கப்பண்ணும், ஊரடாவுதானகண்டத்திலின்று உண்டவன்னபானத் தைநக்கிழுபாய்ச்சும், வீரடாநாகன்விக்கலையுண்டாக்கும் வியானன் மேலோங்கிவக்கதயிலமல்லால், வாரடாவிறுத்திதனை யுறுப்புக்கெல்லா ம் வளமாகப்பாய்த்துமேயிறுகும்பாரே. (௫௰)

பார்க்குமேகூர்மனுதுகண்ணைமூடி பசைதிறக்கற்சிமிட்ட லுடன் பண்ணுவான்பார், ஊர்க்குமேதேவதத்தன்செயுங்கொட்டாவி யுடம்பு முறுக்குண்டாகுமுண்மையாக, வாக்குமேதனஞ்சயன்று னுயிர்போனு க்காற் கபாலத்திலின்றுடம்பை யூதப்பண்ணும் ஆர்க்குமேமண்டை தனைச்சீறிப்போவா னப்பனேசொல்லிவிட்டேனறிந்துகொள்ளே. (௫௧

திரிநாடி.

கொள்ளடாஇசைநாடிகண்ணில்மூன்று கூறுவெளிடைசுழிமுனைபி ன்கலைதானென்றும், விள்ளடாஇடகலைதானிபிரமாதி மிருந்தாககாலவ குட்டத்திருந்துவரி, கள்ளடாகண்டத்தில்மாறியோட்டிக் கபாலவனா தனில்மூடிமார்பிற்பாய்ந்து, தள்ளடாவலதுகரம் பின்கலைதானோடும் த ணித்தவிடையிடதுகரஞ்சாருந்தானே. (௫௨)

சாருமடாசுழிமுனைதானடுமையத்தில் தானுங்கூமூன்றுநிலைதாக் கிப்பாரு, பேருமடாவிடையதுதான்வாதமாச்சு பின்கலைதான்பித்தம டாபேணிப்பாரு, சேருமடாசுழிமுனைதானையமாகும் செப்புவேன்இ சைவாய்வில் மூன்றுவாய்வு ஊருமடாவாதபித்தகுஞ்சத்துமத்திலேனுடு மொன்றாகச்சேர்ந்திருக்க வுணர்க்கிறேனே. (௫௩)

திரிநாடிவிபரம்.

உணர்க்கிறேன் அபானனதுவாதஞ்சேரு முற்றுப்பார்பிராணனை துபித்தஞ்சேரும், பிணர்க்கிறேன்சமானனதுஐயஞ்சேரும் நேர்வாதம் வாய்வுபித்தநெருப்பதாகும், தணர்க்கிறேன்சிலேட்டுமமது தண்ணீர

ருஞ் சாணுமுதனூர்த்திமட்டும்வாதம்வீடு, வினாத்திதேன் வுந்தியின்மே ல் மார்புமட்டும் மிக்கபித்தமிருப்பிடமாய் விளங்குந்தானே. (௩௪)

தானென்றமார்பின்மேலுச்சிமட்டுந் தான்கபமேயிருக்குமடா சகல் வீபோலே, வானென்றவாதமது துவக்கிற்சேரு மயிலோனுங் கோழிய ன்னமாதுபோலுங், தேனென்றபித்தத்தைநோக்கிமேலே சென்றேறிச் சாவலன்றிந்தெளிவாய்நிற்கும், தானென்றபித்தமடையாமையட்டை ந ல்லபுழுபோற்சயல்நாடிப்பாரே. (௩௫)

## நாடிநடை.

நாடிப்பார்வாதத்தைநோக்கிப்பாயும் நன்றுசச்சிலேட்டுமந்தானுக ம்போலுங், குடிப்பார்மண்டூகமபோலேயேறிச் சுருக்கில்லைகணமில்லை மெலிந்துநிற்கும், ஆடிப்பார்வாதமொன் றுபித்தம்பாதி ஐயங்காற்பங்கா னால் சடமோவில்லை,தேடிப்பார்மூவிரலுஞ்சமனாயோடிற நீராதுமிவை சன்னிவாதந்தானே. (௩௬)

## வாதவிதானம்.

தானென்றவாதமதுகோழிபோலேசாவலைப்போல்பித்தமதுகாண் டுமாகில், கோனென்றவாதபித்தங்தொங்கிப்பாயுங் குறுகியாய்வாதமது வேனுங்போலுங்; கானென்றஐபமதுசர்ப்பம்போலுங் கதித்திடுமே வாதமையந்தொங்கிப்பாயும்; ஊனென்றபித்தமது ஆமைபோலுமோடு மேஐபமண்டூகமென்னே. (௩௭)

## பித்தவிதானம்.

என்னுமேபித்தமையந்தொங்கிப்பென்று நீநக்குமேஅளவிடை தானின்னைக்கேளு, பின்னுமே மணிக்கட்டின் கீழதாகப் பெருவிர லங்குலத்திலப்பா மூவிரலைவைத்து, மன்னுமேமூவிரலினிடையினெ ல்லை வைக்குமிடம்விட்டுநீநாடிப்பாரு, முன்னுமேமணிக்கட்டிதனைக் குமேலே மூன்றுவிரற்கிடையளவிலதுடித்தாற்காணே. (௩௮)

## ஐபவிதானம்.

காணுநீவாதத்தின்கோபமாகக் கருநால்விரற்கிடைதான் பித்த கோபம், ஆணுநீஐந்துவிரற்கிடையில்தாண்டி ஐபத்தின்கோபமெனவ றிந்துகொள்ளு, பேணுநீமயிலதுபோல் வாதமாடில்பெருஞ்சாணாம்பா ம்பதுபோலையமேறில், ஊனுநீபித்தமதுஅட்டைபோலுமூட்சுருக்கஞ் சாவாமென்றுரைத்திடாயே. (௩௯)

## மரணக்குறிப்பு.

உரைத்திடவேவாதமதுபித்தத்தைநோக்கி ஓடவேபித்த மந்தஐப த்தேறில், நினைத்திடுமேஐயமதுகண்டத்தேறில் நின்றுமேயுண்ணுகி

ல் வழிலையமூடி, விளாத்திடுமேவாசலேத்து மடைத்துக்கொள்ளு மே லாணசீவகளோமெலிகதுபோகு, மஞாத்திடமேகடிகைஜந்தில் மாணமா வார் மழுவெடுத்தானுமைக்குரைத்த வசனந்தானே. (௯௰)

வசனமென்னவாதமொடுசிலேட்டுமமாண்டும் வறுவாகிம்பித்தம து மாய்ந்துபோகும், அசனமென்னதொண்ணூறுகடிகைகள்னி லவ ர்மாணமாவதுண்மை யறிந்துகொள்ளு, பிசனமென்னவாதமொடுஐய ம்பாய்ந்து பித்தந்தான்புறுவென்னத தணிந்துநின்றால, விசனமென் ன நாலுநாழிகையிற்சாவார் மெய்யென்றுபுலத்தியனேவறிந்து கேளே(

கேளடாவாதபித்தங்கீழ்நோக்கிற் கெடியானதுடிநாதம் வீணை நாதம், நாளடாபாம்பரணைவாலுபோலே நடுவகிறும்நாயெலும்புகளைக் கவ்விவோடிற், சூளடாகிழிட்டுக்கடிக்கும்போலுஞ் சுத்திவரும்மேலை வுமே சுழன்றிட்டாலுந், தேளடாபித்தஞ்சேத்துமத்திறு லேறிச் சின த்திட்டால் மெய்குளிர்ந்து தெரிக்குந்தானே. (௯௨)

தெரிக்குமேவயிற்றுவலிநெஞ்சுவீக்கஞ் சிவந்திருக்கு மஞ்சள்நிற் கண்களுக்குநாக்கு, எரிக்குமேமுகங்கோணுமிரவுக்கப்பா எரிச்சலுண் டாய்ப்பல்குளிருந்திரோகந்தானு, மூருக்குமேயடிக்கடிதான் பெருமூச் செய்துமுழிபுரட்டிந்தாலுமாறுகப்பார்க்குல், குரிக்குமேயுள்ளங்கையுள் ளங்காலுங் குளிர்ந்திருக்குமூன்றுக்குங்குறிப்பைப்பாரே. (௯௩)

குறிகேளுமேற்சுவாசங்காணும்பாயுங் குளிர்ச்சிகண்டுமூக்கன்றிவை யிற்பாயும், மறிகேளுமுடல்நடுக்கமறுவழிக்குமையாமைந் தனேவாடா திருக்கிலசையுண்டாகும், வெறிகேளுவுச்சிகனிற்குடுண்டாகு மீன்வழி ல்லேவிழ்ந்திடுகல்மெய்யென்றெண்ணு, அறிகேளுபொறியாறவந்தரித் தவீசன் சுந்தரிக்குச்சொன்னதிந்த சுருதிதானே. (௯௪)

நாடிமாத்திரைநிதானம்.

தானென்றவாதமாத்திரைதானிரண்டு தப்பாதுபித்தமதுகாலொ ன்றேரில், வேனென்றவாதபித்தந்தொந்திப்பாகு பிகுவாதமிரண்டுஞ் சிலேட்டுமமொன்றாகில், ஊனென்றவாதமையந்தொந்திப்பாகு முற்ற பித்தம்பெட்டித்து வாதமொன்றுசேரில், கோனென்றபித்தமுடன்வா தஞ்சேர்ந்து கொண்டதிந்தரோகமெனக்கூறுவாரே. (௯௫)

கூறுவேன்பித்தமாத்திரையண்டாகில் கொடியசிலேற்பனமொன் று குறிக்குமாகில், ஆறுவேன்பித்தசிலேட்டுமந்தானென்றுந் துலக்கு

சிலேட்டுமமிரண்டுவாதமென்றுந், தேறுவேன்சிலேட்டுமவாதந்தானெ
ன்றுஞ் சிலேட்டுமமேகாடிபித்தமொன்றுசேரில், வேறு நீபிணையாதே
செலுத்துமபித்த மிகுந்திடுமேசுரம்பேதிமிகுதிதானே. (௬௬)

மிகுதியென்றஐயத்தில்வாதஞ்சேரில் மேலெலும்புராகத்தின் பி
ணைச்சலபோலே, தகுதியென்றவாதமுடனையஞ்சேரில் தாரணியில்மயி
லிறகுபோலேயாகும், திருதியென்றபித்தமுடனையஞ்சேரில்சேற்றிலூர்
தவளையொடு அட்டைபோலாம், மிகுதியென்றஐயத்தில்பித்தஞ்சேரில்
நீடாவுவாமிற்பட்டளவியுமாமே. (௬௭)

ஆமப்பாவாதமதுதனித்தபோது அப்பனேமயிற்சாயலாகிறிற்கும்
தாமப்பாபித்தநடையெருகவோடுதனித்துநின்றஐயமது அமர்ந்து மீளு
ம், ஓமப்பாமூன்றாலுஞ்சரியேயாகி லுயர்ந்துநின்ற வாதபித்த முற்றுய
பாரு, வேமப்பாபலசலங்கள் கட்டேயாகுல மிச்சமடாவாதமதுவிளங்
கக்கேளே. (௬௮)

கேளடாகூடமும்பிற்பித்தமிச்சக் கெடியாகக்குளிர்ச்சி கண்டா
லேபமிச்சங், தாளடாவாதமதுபித்தஞ்சேரில தப்பாதுசிலேட்டுமத்திற்
பித்தஞ்சாரும், வேண்டாஐயமதுமேலேயேறில்மேலைத்தைக் கடையா
ள மாபுமூக்கு, கேளடாபுறக்கைகள்செவிகளோடு குளிர்ந்துமேவெ
தும்பியையமீறுந்தானே. (௬௯)

மீறிலேகடிகையைந்தில்மரணமாவார் வெடிவெடுத்தபித்தமதுமீ
றினக்கால், கூறுவேன்வாதமையக்குளிர்ந்ததானல் கொள்ளுமடாபித்
தசன்னி அறிவுபோகும், வாறுகேள்வாதமையமீறிற்றானல் வகுத்தபி
த்தமழிந்ததானல் மரணசன்னி, சீறியேயுட்குத்துமிறவிச்சாகிச்செண
த்திலே யிசுவுவருந்திணணந்தானே. (௭௰)

இன்னமுன்னையத்தில்வாதஞ்சேரில் செப்புவேன்சன்னியொடு
தோஷமுண்டாம், எண்ணமுடன் மெய்ப்பிக்குஞ் சோபமுண்டாம
எழில்மூர்ச்சைசோகையுடன்பாண்டுகாணும், வண்ணமுடன்பித்தத்தி
ல்வாதம்வந்தால் வரும்வாறுபீனசங்கள்மண்டைக்குத்து, சன்னுமடா
பவுத்திரங்களையாப்புண்டாந் தப்பாதுகல்மூலஞ்சாருந்தானே. (௭௧)

சாருமடாபித்தமந்தவாதத்தேறில் தளர்ந்செய்யும்பாண்டுகாமாலை
தானுஞ், சேருமடாசீரம்பல்மகோதரங்கவுளி செப்பரியமதவைவெப்பு
ப் பார்வைகாணும், வருமடாஐயமதுபித்தஞ்சேரில் வாயூரல்சுரம்பேதி
வாந்திகாணுந், சேருமடாஐயமதுமீறிற்றானல் தோன்றுமடாசமகா
சஞ்சுருக்குதானே. (௭௨)

## அவஸ்தை பத்து.

ஈருக்கான அவஸ்த்தை பத்துஞ்சொல்லக்கேளு துடியான முதல
வஸ்தைபிணமோநாறு, மூருக்கானவிரண்டிநலம் வேற்றுமையேகூறு
மூன்றுக்குந்தெளிவதுதா நாற்றமாகும், அருக்கானநாலிலேமே லிளைப்பு
காணுமைந்துக்குமுகம்வேற்குமாறுக்கப்பா, நருக்கானயுடம்பதுவுங்கு
ளிருமேழில் நன்றான அன்னத்தைநாடும்பாரே. (எ௩)

நாடுமேயிருநான்கில்கண்பஞ்சாடும் நலமாகவொன்பதிலே வுடம்
புவேர்க்கும், ஒடுமேபத்துக்குமரணமாவார் உத்தமனே அவத்தைபத
துமுரைத்தேன் பாரு, தேடுமேபலநூலுமறிந்துகொண்டு தேசத்தில்வ
யித்தியந்தான்செய்யவேணும், கூடுமேஅசாத்தியமாசாத்தியத்தின் கு
ணங்குறியுங்கண்டுமேகூறினேனே. (எ௪)

## நூற்கோர்வை.

கூறினேன்வயித்தியமாயிரத்தைந்நூறு குணமாகுமறுநூறு கர்ம
காண்டம், ஏறினேன்பரிபூரணந்தானப்பா யிருபத்தோராயிரத்தி யறு
நூறாக, தேறினேனாயிரத்திலிருநூறாக செப்பினேன்மூன்னூற்றிமுப்
பத்தாறு, வேறுதான்குணம பன்னீராயிரத்தில் விரித்திட்டேன் நூறு
மன்பதுளவந்தானே. (எ௫)

தானென்றவகைகைக்குநாலுகாண்டம் தான்சிந்தாமணிநாலாயி
ரம்வெண்பாவாய், காணென்றபஸ்பூண்டு மூலிகையின்சாக்குங் கடைம
ருந்துபாஷாணங்கடல்மீனுப்பு, வேனென்றசீவசெந்துமிருகவர்க்க மிகு
பரவையெண்ணெய்தண்ணீர் வேணதெல்லாம்,நானென்றறிகண்டு புன்
னீராயிரத்திலகாணுரைத்தேனைதகுறுக்கிசாட்டுள்ளோர்க்கே, (எ௬)

நாட்டினேன்தைக்குறிக்கி பதார்த்தமேல்லாமொன்றாக ஆயிரத்திரு
நூறாக, குட்டினேன்பொசிப்புக்குபாகமார்க்கம் சொன்னேனான்பன்
னிரண்டுநூறிலப்பா, காட்டினேன்கைப்பாக மருந்தின்பாகங் கணமா
ன நூல்தோறுங்கண்டுபாரு, மாட்டினேன்வாதநூல் லட்சஞ்சாப்புவத்
திட்டேனறிந்துகொண்டுமருந்துசெய்யே. (எஎ)

மருந்ததனைவ்வகைம்முறையாய்செய்யவேண்டுமானிலத்தில்கூறறிந்
துபார்க்கவேண்டும், இருந்தவேயுடலறிந்து நோயுங்கண்டு செப்புமவர்
மொழிகேட்டு தாதும்பார்த்து, பொருந்தவே பொசிப்பறிந்து பலமும்
பார்த்துப், பொருளேவல்புண்ணியவானெனவறிந்து, அருந்தவேமருந்
துசெய்தால்நோய்போம்பாரு அப்பனேசஞ்சரிக்குமாண்மைகேளே. ()

## கற்பகருவுற்பத்தி.

ஆண்மையென்றுமங்கையர்கள் பூர்க்குங்கால மன்றுமுதல்பதினு
மூநாளுமந்த, தாண்மையன்றிப்பதினறு யிதழாய்நின்ற தாமரைபோல்
மலர்கநிருக்குஞ்சாற்றக்கேளு, காண்மையன்றிதினமொன்று யிதழ்தா
னென்று கருவானகருக்குழிதான்மின்னுட்குள்ளே, பாண்மையென்ற
விந்தல்சேயூருஞ்போது பாயுமடாவன்னியொடுவாய்வுதானே. (௭௯)

வாய்வோடுவிந்துசென்றுமலர்க்குட்சேர்ந்தால் மலரிலுள்ளயிதழ்
களெல்லா மூடிக்கொள்ளும், தேய்வோடுவாய்வுநின்று இரட்டும்பாரு
செப்பெரியதினமொன்றில்கடுகுபோலாம், சாயுமடாநாளிரண்டில் மல்
லிபோலாந் தப்பாமல்நாள்மூன்றில் மிளகுபோலாஞ், சேயுமடாநால
ம்நாள்வரைவிளைபோலாகுஞ் சேர்வைந்தானுள்குமளிபோலாகும்மே. ()

ஆகுமேஆறுநாள் நெல்லிக்காய்போ லானனுள்யேழுக்குப் பின்
னைக்காய்போல், ஏகுமேயெட்டாநாள்பஞ்சபூத மீதிலுண்டாம்பஞ்சவர்
ணமிதிலேதோன்றும், போகுமேநவதினத்திற்காக்கைமுட்டைபோலா
கும்பத்துமுதலோதநாளும், வேகுமேகோழியண்டவடிவதாகும்வின்று
இதேன்திங்களொன்றில்வாழைப்பூவே. (௮௧)

பூவிலேயிரண்டுதிங்கள் கழுத்துண்டாகும் புகழ்சிரசுமூறுப்பாரு
மூன்றுந்திங்கள்; காவிலேசந்துக்கால்கையுண்டாகி சட்டகம்போல்வ
டிவாகிவிரலுமுண்டாம், நாவிலேவாய்நாக்குமூக்குமுண்டாம் நவிலுகி
றேன்மாதமைந்தில்செவியுண்டாகும், பாவிலேயாறுதிங்கள் குய்யத்து
வாரம் பாலுக்குமேழுக்குமநரம்புதானே. (௮௨)

நரம்புதானெழுபத்திராயிரந்தான் நாடியெட்டாந்திங்களுக்குமயி
ருண்டாகும், உரம்பவேதாய்போசிக்குமன்னசார மூச்சிவழிதானிறங்கி
யுடல்பெருக்கும், வரம்பெறவேயொன்பதிலேஉயிருந்தான்வந்து,மறை
ஞானமுண்டாகுமூச்சிவழிமூடும், நிரம்பவேதசைமாதம் சென்றுவிந்த
நெருப்போடுவாய்வுமிஞ்சிக்கவுழ்த்துந்தானே. (௮௩)

தாணடாசிரந்திரும் பிபிறந்தபிள்ளைதனக்குபிர்ம சிருஷ்ட்டி நூரா
ண்டுதன்னில்,ஏனடாவாலையதுவோணந்தாகு மிறுபத்துதானுகுமட்டும்
வளரும்பின்னே, ந்னடாவொளிபோகும்முப்பதாண்டில்நாற்பதுக்குள
ழகுபோகாடிப்பாரு, வேணடாஅம்பதுதான்வயதுதன்னில் விளாந்து
பிரிதிவிலப்புமேவும்பாரோ. (௮௪)

மேலைவயிலே யுடல்தளராமப்புச்சென்று விளக்குமணல் தலை
நோக்கிவெளுக்கும்ரோமம், தாளையிலேயறுபதாம்வயதுதன்னில்தன்ம

னிருமண்ணுடனே சார்ந்துகொள்ளும், பாகையிலே ஈஞ்செருளியுங் குறைந்துகாட்டும் பாலகனோடக்கில் வெகுதடை தான்பண்ணும், கூலையிலேயெழு ம் தென்றவயதிற்றேய்வு, கொண்டலைத்தா னொருக்குமணல்தாகிற்கானே. (௮௫)

காணவேதானலருமறிவுகுன்றும்கருதிப்பாரொன்பதென்றவயதிற்றானும், கோணவேவெய்வுவந்துவெளியிற்றாயுஞ்சுவாசமேல்நோக்குமடாதொணணூறாண்டில், பூணவேயாகாசஞ்சீவனுடு புலன்களைத்து வசமாகப்பொருந்திக்கொள்ளும், காணவேயிந்திரியமற்றுப்போகும் நலமில்லை நூறாண்டில்மரணந்தானே (௮௬)

தானென்றபிரமசிருஷ்டியென்றநூறில் தங்கைதாய் தான்செய்த கருமந்தன்னால், வேனென்றவுபமிருத்துவந்துகூடிவிஷகடிகன் வெட்டுருத்துமிகவுண்டாகி, கானென்றமிருகத்தாலஞ்சைதின்று கனவயதுகுன்றுமப்பா வருதிப்பாரு, உ-னென்றபிரமசிருஷ்டி காண்பிக்க வில்லை காதலருமைக்குமாத்தார்காம்சொன்னோமே. (௮௭)

உண்டிபிரிவு.

சொன்னோமேயின்னமொருசூட்சஞ்சேரச்சொல்லுவேன்பொசித்ததெல்லாமாறுபங்கா, முன்னே தான்மலத்திலொன்றுமூத்திரத்திலொன்று மீளுமேதசையிலொன்று விந்திலொன்று, தன்னே தான்மூளைதனி லொன்றுசேரும்சார்ந்திடுமேவுதிரத்திலொன்றுமாக, மன்னே தான்சயகாசயேகரோகிவலுவான அதிசாரம்வந்தபோக்கே. (௮௮

வந்தபெருங்கிருணிகுன்மமெலும்புருக்கி வாங்காதசுரத்தோர்களை சாத்தியரோகிப், பந்தமுறத்தின்றதொன்று ஆறிலப்பாபாலகனே நோயிருந்தும்பாருபாரு, உந்தனிடவிந்தழிந்தால் எல்லாம்போச்சு வுண்டதெல்லாம்பாழாச்சுயுறவும்போச்சு, விந்துபலநீள்கிபெரும் பிணிக்குள்ளாகி மெலிந்துகெட்டுப்போகாமல்விள்ளுவேனே. (௮௯)

பூரணவல்லாதிதாதுக்குச்சூரணம்.

விள்ளுவேன்பூரணவல்லாதிதன்னை மேன்மைபெறச்சுத்திசெய்த செங்கொட்டைதானும், அள்ளுவேன்பலமரண்டுநிறுத்துக்கொண்டு அழுக்குறாதான்பல மொன்றுபாலிற்சுத்தி, எள்ளுமேகழுவியெடு பலமிரண்டு யிதமானபாக்குபலமிரண்டுபோடு, கொள்ளுமேநாயுருவிவித்தைச் சூரிக்குணமானவிரக்ஷதயொடுவஞ்சாவித்தே. (௯௰)

வித்தான துளசிவிரை துத்திவித்து மேலான அரசுவத்தி ஆலம்வித்து, சத்தான முருக்கவிரை நீர்முள்ளிவித்து தான்பூனைக்காலிவிரையாவாரையின் வித்து, முத்தான இருநீற்றுப்பச்சைவித்து முள்ளிருக்குங் கருவேலன்வித்துங்கூட்டி, சித்தான சிறுகீரைப்பொன்னுவாரை தேத்தான வித்துடனே நிம்பநிவெண்வித்தே. (௬௧)

பதினெட்டுவகைக்குரண்டுகழஞ்சி ஆக்கிப்பாலகனே இம்பிலியுமிளகுசுக்கு துகியிட்ட ஜாதிக்காய்கிராம்புபத்திரிசோம்புகருவாப்பட்டைச் சாரப்பருப்பு,வீதமிட்டவான்மிளகுமதனப்பூவும்வேன் நிசிறுநாகப்பூஅபினுந்தானும்,மதமுட்டும்கசகசாயேலமோமம் வாலுளுவைகோஷ்டம வகையொன்றுவாங்கே. (௬௨)

வகையொன்றுகழஞ்சிடைதான்மூன்றுவாக்கி மைத்தனோவிபில்லைத்துச்சூரணித்து, துகையென்லபேரீச்சுமுந்திரிகைப்பழமுந் தாக்கடாபலமொன்று சொல்லக்கேளு, புகையென்றகோரக்கர்மூலிதன்னை போக்கன்றிபலம்நாலு வறுத்துக்கொண்டு, பகையென்றகுண்டாவில்கடையதுளாம் பக்குவமாய்ப்பின்வருத்துக்கடைந்திடாயே. (௬௩)

கடைந்தபின்புவறுத்துபின்கடைந்துவாங்குகருகாமல்யேழுதிரங்கடைவறுப்பாது, அடர்ந்தசெங்கொட்டையொடு யெள்ளுஞ்சேர்த்துசூரணமாயிடிமுந்திரிபேரீச்சோடு, படர்ந்தவொருகல்லுரலில் சாமம்நாலுபக்கு வந்தான்மயினம்போலானபின்பு, அடர்ந்தயிருவகைபொடியுமுறவுசெய்து வதில்சீனிக்கற்கண்டுகழஞ்சிநூறே, (௬௪)

நூறுமேபொடிசெய்துக்கூடச்சேர்த்து நுண்மைபெறப்பீங்கானிலடைத்துக்கொண்டு, தேறுமேயனைக்கழஞ்சிசூரணத்தில் சேர்த்திடுநீகுகபற்பம்பணத்திற்பாதி, கூறுமேயந்திசந்திப்பாலிலீய கொடியபிணிதிருமடாவிந்துகட்டும், ஏறுமேதாதுமிகவலுக்கும்பாரு யெளிதல்லாகுரணந்தாவியம்பினேனே. (௬௫)

இயம்பினேனந்திசந்திகொள்ளும்போதுயேறுமேபோதைகொண்டுமயக்கிவீழ்ந்தால், இயம்பினேநீருள்ளிச்சாற்றினோடு யெலுமிச்சம்பழச்சாறுங்கூடச்சேர்த்து, இயம்பினேன்குடிமயக்கமொழியும்பாருயேதேனுங்குடிக்கலாம்பத்தியமேயில்லே. இயம்பினேன்லகிரிகொண்டால்சந்திகூட்டு யென்மகனேகாற்கழஞ்சியீய்ந்திடாயே. (௬௬)

ஞயாதேயிந்நூலைமடையர்கையி லீய்ந்திடுவாய்வாமிக்கும் ஞானி க்கப்பா, கோயானசண்டாளர்க்கீய்ந்தாயானால் கொடியிலேகொலைசெய் வார் நுவலக்கேளு, தீயானபாவிகளையகலத்தள்ளு செப்பாதே தொழி ல்முறைகள் கைப்பாகந்தன்னை, பேயாகிக்குண்டாவிற்கடையும் பாகம பேசாதேவெகுபதனம்பேணிச்செய்யே. (௯௭)

செய்யையிலேநீபாகஞ்சிதறிடாதே திருடாதேபொய்சொல்லித்தி ரிந்திடாதே, மையலிலேதினமயங்கி யலைந்திடாதே வார்த்தைமெத்தப் பேசாலே வலுச்செய்யாதே, பையாவோடிணங்காதேபாம்பாடாதேப த்தினிமேலிச்சைகொண்டால் பாழாம்பாரு, கொய்யையிலேதிரிகின்ற சண்டாளர்க்குக்கூறினால்நாகமென் றுகூறினேனே. (௯அ

## சாரவல்லிக்குளிகை.

கூறுகிறேன்வாய்வென்றதனைத்தும்போகக் கொடியசாரக்குலாதி க்குளிகைதன்னைப், பீறியதோர்பெருங்காயம் கழஞ்சுநாலொன்று பே ரானசீரகமோகழஞ்சிரண்டு, தேறியதோர்வாய்விளங்கங்கழஞ்சுமூன்று செப்பரியகொத்துமல்லி கழஞ்சுநாலு, ஆறியதோர்செவ்விய மைந்துசுக் குமாறு அப்பனேமிளகேழுதிப்பிலியைங்கழஞ்சே. (௯௯)

## வாய்வுசூருக்கு.

கழஞ்சுவொன்பதாங்கோஷ்டங்கடுக்காய்பத்து கடுஞ்சித்ரமூலம துப்பதினொன்றாகும் விழஞ்சியிராறுமடா வோமந்தானு மிதமாகச்சூ ரணஞ்செய்யிதற்குவொட்டி, தழைஞ்சவெல்லாஞ்சேர்த்துநீ வுரலிலிட்டு த் தானிடித்துமைபோலேசாற்றக்கேளு, குழைஞ்ச பின்னைக்காய்போ லுருட்டிக்கொண்டு கூசாமலந்திசந்திகொடுத்திடாயே. (௱)

கொடுத்திடுவாய்வாய்வென்றயிருபத்தாறுங் குன்மமேவேர்பறி க்குங்குன்மமெட்டும், எடுத்திடவேமார்படைக்கும் ருத்திரவாய்வுவெ ன்னசொல்வேன்தமரகமுமேகும்பாரு, அடுத்திடவேபத்தியந்தா னிச் சாமத்தியம் ஆகாதுவாய்வென்றபதார்த்தமெல்லாங், கடுத்திடவேமகா சாரத்துலாதிதன்னைக் காண்மக்காள்சொல்லுகிறேன்கருதிக்கேளே ()

## மகாசாரத்துலாதிக்குளிகை.

கருதியேவசம்புசுட்ட கரிதான்ரண்டு காயமதுமூன்றுவாய்விளங் கம்நாலு, தருதியேசீரகமைந்துடனேமல்லி தானாறுமிளகேழுதிப்பிலி யுமெட்டு, சுருதியென்றசுக்கொன்பானேமம்பத்துஞ் சொல்லுமவரிக்

காயும் பதினென்றாகும், பருதியேகொடிவேலி பனிரண்டாகும் பண் பாகமகாபேதைபதின்மூன்றெண்ணே. (௱௨)

எண்ணவே கோஷ்டமதுகசாழப்பா வேதமாம்வெள்ளுள்ளியதி னைந்தென்று, உண்ணியேபழுத்துலர்ந்ததேங்காயீரொட்டு உயர்ந்தரசகற் பூரமவிராகனிடையொன்று பண்ணியேசூரணித்துவைத்துக் கொண்டு பாறையுப்புஇந்துப்புபேதியுப்பு, வன்னிவெளையலுப்புகல்லுப்பல்லா ல் மாசற்றஆடுப்புசெந்திவெடியுப்பே. (௱௩)

உப்பெல்லாம்வகைக்குஅனாபலமேதாக்கி யுடனவாக்கவெருக கன்பால்கள்ளிப்பாலே, செப்பிலேவைத்துமொருசெப்பில்மூடிச் சீலை மண்செய்துலர்த்திப்புடத்திற்போடு, தப்பில்லாதெடுத்துநீ பொடித்துக் கொண்டு சனிவானவிருகழஞ்செடுத்துச்சேரு, மெய்பல்லகாந்தமிரு கழஞ்சுசேர்த்து மேலானவிலைக்கள்ளிப்பாலைவாரே. (௱௪)

வார்த்திடுவாய்பொடிநனைய வுலர்த்திக்கொண்டு மைந்தனேமருந் தொட்டிவெல்லஞ்சேர்த்து, மார்த்திடுவாய்சூரணத்தைத் தூவித்தூவி வலுவாகச்சாமந்தாணிடிக்கும்போது கூர்த்திடுவாய்மயினம போலான பின்பு குளிகைசுண்டைக்காயைப்போலுருட்டிக்கொண்டு, வர்த்திடுவா யுதையாதியுண்டையொன்று ஏருமேமலசலக்கிருமிபோமே. (௱௫)

போகுமேமகவைவப்புப்பார்வைவாய்வு பொல்லாதபீலிகையும கோசரகிராம்பல், சாகுமேகவுசிதலைமூடக்குவாதம் தானேகும்வாய்வு குடல்வாதந்திரும், ஆகுமேபத்தியந்தான்புளிப்புமேறு தனாக்கிளாவ முதலம்பிஞ்சவரைப்பிஞ்சு, தாகுமேவெந்நீராமெற்றென்றுகா தப்பா து அயனுதிவடகந்தேகேளே. (௱௬)

அயனுதிவடகம்.

கேளப்பா அயப்பொடிதான்பலமோரண்டு செடிவானபழச்சாற்றி ன் சுத்தி செய்து, நாளப்பாமாதளையின்பழச்சாற்றிலிட்டு நாள்மூன்று நிழலில்வைத்துலர்த்திப்போடு, கேளப்பாகுமரியதுசாறிப்போகும் குறிப் பானகருநாயிப்பட்டைச்சாற்றில், ஆளப்பாமூன்றுநா ளூறப்போடு அ ப்பனேயரைத்துவில்லைவைத்துப்போடே. (௱௭)

காமாலை.

போடப்பா கெஜப்புடந்தானுறவிட்டுப் புகழாகக்கரிசலாஞ்சாற்றி ல்விட்டுத், தேடப்பாகொதிக்கவிட்டுமயினமபோல்வாங்கித் திறமான

மிளகுபல மிரண்டிஞெறி, நாடப்பாவோம்மதுபலந்தான்ரெண்டு கலமா
ண தேங்காயிற்குள்ளேயிட்டு, கூடப்பாரவிபாலேவிரம்பவிட்டுத துவாரத்
திலாப்பறைந்து சீலெசெய்யே. (௱௮)

செய்துமேஞுக்கிடமாய்ப்புடத்தைப்போடு இரட்டைலங்கப்பதந்
தெடுத்துக்கல்வதனிட்டு, எய்துமேமூன்னாமுக்கூடப்போட்டு விளங்
குமகையான்சாற்றிலரைநாலுசாமம, சைபவேயரைத்துருட்டிச் சுண்டை
க்காய்போல் கலமாகநிழலுணர்த்தினைத்துக்கொண்டு எய்யமேலேவொரு
குளிகைமேதினீடத்தயிரி லெழுநாளந்திசகதிகொடுத்திடாயே. (௱௯)

கொடுத்திடவேபாண்டுகாமாலைபத்துங் குணமாகும்பத்தியத்தைக்
கூறக்கேளு, தடுத்திடவேபெருமைமோருப்பிடாமற் றுரைருந்தயேழு
நாள் தாணடிப்பின்பு, கடுத்திடவேயெட்டாநாள்வறுத்துக்கூட்டு கண
மாகவொனபதிலே தலையுமுழ்கு, தடுத்திடவேவருநீராயிறங்கும்
பாரு தானேமுதினமதிலேயகன்றுபோமே. (௱௰)

## திரிலோக வடகம்.

போமென்றதிரிலோகவடகந்தன்னைப் புகலுவேன்மாணுக்காள்பு
கழ்ந்துகேளு, தாமென்றகாந்தமொடுஇருப்புசெட்டம் தன்னுடனேயரப்
பொடியுஞ் சமனாய்க்கூட்டி, நாமென்றபழச்சாறுகாடிமோரில், கலமா
கச்சுத்திசெய்து கல்வத்திட்டு, வாமென்றகாட்டுவாமணக்கஞ்சாற்றில்
உறுதியாயிருசாமமரைத்திடாயே. (௱௰௧)

அரைத்துநீவில்லைதட்டிக்காயப்போடு அப்பனேயோட்டில்வைத்
துப்புடத்தைப்போடு, விரைத்துநீயிப்படியேபயசரூபம்போடு விதமா
னசெந்தூரமாகும்பாரு, நிரைத்துநீதிரிபுடுகுளிகை மோரமே சேரனு
வெள்ளுள்ளி பலங்கால்வீதம் திரைத்துநீகள்ளிப்பால் கழஞ்சநாலுதி
ரிலோகமபலமொன்றுசேர்ந்து ஆட்டே. (௱௰௨)

ஆட்டுநீயிருசாமங்கருப்பஞ்சாற்றி லப்பனேதாதுளங்காயனவதா
க, நாட்டியேகுளிகைகட்டியுலர்த்திக்கொண்டு கலமானமிளகு விட்டு
வெந்நீராட்டு, மாட்டுமேயிஞ்சிநீர்சுக்குநீரில் வகையாகபாண்டாறுஞ் சூ
ன்றமொட்டுக், கீட்டுமேகாமாலைபத்துமயோகமும் நீரம்பலமகோதாமு
ங்கவுசிபோமே. (௱௰௩)

## சங்கநிதிதயிலம்.

போகமேதுயிகுந்கலர்க்குகாபிற்குடாப்புண்ணுதித் சயரோலமதுமே
ங்குசீழார், ஆகமதில்சிரந்திபதினெட்டுமண்டாமடங்காத சூலை துய
ருமூன்றுதி, மேகமதுமூவேழுதீச்சனங்களாறும்வெந்துவருநின்றவிக

ந்தகத்தாளிமூன்றும், தாகமேபருத்தபீனசங்களாறும் தலைநோயும்பிட்
ரிவலிசயங்களைந்தே. (௱௰௪)

சயகாசசிலேற்பனங்கள் தொண்ணூற்றுருந் தசையடைப்பு நீர
டைப்புதேகங்காந்தல், பயமொப்வாய்நொந்தவந்துதா துஷ்டம்பனைத்
தெழூந்தசூலங்கமுறுபத்துநாலுந், துயந்தந்தவாய்வோடுரத்தபித்தந் துடி
வாதந்திமிர்வாதந்தீர்வதற்குத்தயவுகந்துசொல்லுவண்டாதயிலமொன்று
சந்தனம்முலாச்சாதிதன்னைக்கேளே. (௱௰௫)

மகாசந்தனாதிதயிலம்.

சாதியென்றசந்தனந்தான்பலமும்பத்து தானமிர்தகூவிளம்வேர்
மூத்தஞ்சீரம், சீதமென்றசகாதேவி யசுவகெந்திசிற்றுமுட்டிப் பேரா
முட்டி வெறுகின்மூலம், பேதமென்றகுருந்தொட்டி வகைபலந்தானே
ந்து பேரானகொம்பாக்குப்பலந்தான்பத்து, ஆதியென்றஅருகம்வேர்ம
ஞ்சள்கோஷ்ட மகிலோடுநன்னாரிதாரமாமே. (௱௰௬)

ஆமென்றவிலாமிச்சவெட்டிவேரும் அரிசியறுதேக்குடனே சிறு
காஞ்சோரி, நாமென்றவகையொன்றுபலந்தாநாலு நறுக்கியேயிடித்தத
னைப்பாண்டத்திட்டு, காமென்றசுத்தசலங்கலந்தான்வாரு காட்டமது
ஒருவிறகாலெரியாறுமல், வேமென்ற ஆறுபடி குறுக்கிவாங்கி விரிந்த
வாய்தாளிதனில் விட்டிடாயே. (௱௰௭)

விட்டிடுவாயென்னெண்ணெய்படிதானாறு வெண்பசுவின்பாலது
வும் படிதானாறு, அட்டியில்லாயறக்கினிடகசியாழ மூன்று அப்பனே
தாளிக்காய்புகட்டியேதான், இட்டநெருப்பாறுமலபிழிந்திடாமலியம்பு
கிறேன் கற்கவகையியல்பாய்கேளு, மட்டில்லாசந்தனமு மஞ்சளேல
மண்திஷ்டிகொத்துமல்லி மகாப்பூவே, (௱௰௮)

பூவானநாகப்பூசித்தரத்தை பொன்மெழுகுபூலாவேர் மதுராங்கோ
ஷ்டம், காவானசெண்பகப்பூவெட்டிவேருங் கடுகுரோகணிதகாமிலா
மிச்சம்வேர், தாவானபச்சிலைகச்சோலமாஞ்சில்நக்கோலம்சதைகுப்பை
சாஸ்திரபேதி, தேவானதாரமகிலவங்கப்பத்திரி சிவந்தசெந்தம்சாதிக்கா
ய் கிராம்புதானே. (௱௰௯)

தானென்றபத்திரியுமிலவங்கப்பட்டை தரும்பிசினுநறுமிளகுவெ
ள்ளிலோத்திரம், கானென்றஅஸ்வகெந்திவேரிரேணு கடுகானநன்னா
ரி செவ்வள்ளிதானும், மானென்றவகைக்குரண்டுகழஞ்சுவீத மாட்டி
யனைமைபோலஆட்டுப்பாலில், கோனென்றகலக்கிவிட்டுக் கொதித்தா
றுமல் குளிராமலேந்துநாள்வைதப்பாதே. (௱௨௰)

தப்பாதே ஆறுநாள் மயனர்தன்னிற் சார்ந்தபச்சைக்கற்பூரம்புனு குசட்டம், செப்பாதேகோரோசனையுங் குங்குமப்பூ திறமான கோஷ்டம்வகைக்கழஞ்சிரண்டு, மெய்ப்பாகப் பொடித்துவடி கலசத்திட்டுவிமலரொடுகணபதிக்குப்பூசைசெய்து, அப்பாகேள் வடித்திறுத்துதானியந்தன்னி லழகாக திக்கொன்று வைத்திடாயே. (௱௨௧)

வைத்தொருநயிலத்தை முழுகும்போது மைந்தனேசீயக்காய் வென்னீராகும், மைத்தொன்று மாகாது தீரும்நோயைவழுத்துகிறேன்மாணாக்காள் மகிழ்ந்துகேளு, அஸ்திசுரம வுள்ளுநக்கி தாபசோபமரோசிவிஷசுரமாந்த முள்ளுநக்கி,சததியொடு பெரும்பாடு பீனிசங்கள்சயகாசம் இருச்சிசுரம் தாகம்போமே. (௱௨௨)

போமப்பா மேக்கத்தி னோடும்புருக்கி பொல்லாதகிரந்தி வட்டைச்சூலைவாய்வு, தாமப்பா பித்தசிலைற் பனங்கொந்திரப்பு சந்திசிங்கிகுறுமுதல்புத்துத்தீரும், ஆமப்பா கன்னேசி கன்னப்புத்லை அடிநாவிற்சூலைபுத்துகண்டமாலை, நாமப்பா கைகண்டவறுநூறுக நவின்றிட்டதினமொன்று நவிலக்கேளே. (௱௨௩)

நவிலக்கேள் நீர்ச்சூலை ரத்தசிங்கி நயனமதில்தோஷங்கள் தொண்ணூற்றுறுங், தவிறுமேதாது நஷ்டங் திமிர்வாதங்கள் தளர்ச்சியுற வாதமொடு சந்துவாதம், புவியதனில் மிரவிகண்ட பனிபோல்நீங்கும் புண்ணியனோ யித்தயிலம் புகழ்ந்துசெய்வார், குவிமுலையாள் வயித்தியற்குவயித்தியபாகங் கொடுத்திடுவாய் வெகுமானங் கொடுத்திடாயே. (௱௨௪)

கொடுத்தாக்கா லவன்றனக்கு வியாதிதீருங் குவலயத்தில்பெரும்பிணிகள் கூடிப்போம்பார், கடுத்தாக்கால் கர்மவினை திருமோசொல்கனமான வயித்தியற்கு மனம்நோகாமல், தடுத்துனாகள் சொல்லாதேவிசுவாசமாகத் தான்வணங்க கர்மவினை சமுத்திரமேபுக்கும், மடைந்தனமாய்த்திரியாதெ பிணிதீராதுவல்லமைகள் பேசாதே வணங்கிக்காரு. ( )

(மகாநயனசஞ்சீவித்தயிலம்.)

வணங்கவே சொல்லுகிறேன் மாணாக்காளே மகாநயனசஞ்சீவித்தயிலந்தன்னை, இணங்கவே சிறுகீரை பொன்னாங்காணி யெலுமிச்சம் நன்னாரி முத்தக்காசு, மணக்கமழும் கந்தியா வட்டையின்வேற் வாதத்

தையடக்கிவேற் சன்கன்குப்பி, உணக்கவே முடக்கொற்றான் முசுட்டைநொச்சி யுத்தமணி கருத்தக்காள் கணந்தன்னிலேவே. (௱௨௧)

வேரான அமுக்கரா செங்கித்தலைச்சுடு சிறைவரண சிறுவேலி யிலாமிச்சம்வேர், நீரான காமனாயின் வலையுவளைக்கியா னெய்தலெனற இழங்காத்தைச சவுரிக்கொத்து, பேரான சீர் முட்டியாலம்பட்டைபேய்ப்பீர்க்கு அதிமதுரம் தேவதாரம், சீரானவேறலமையும் தான்திககாயுஞ்செப்புகிறேன்வகையொன்று பலமுமூன்றேன. (௱௨௨)

மூன்றேடு சந்தனமும்பலந்தானெட்டு மொளிசிற்று முட்டிவேர்பலமுமைந்து, தோன்றுமிந்த வகையனைத்து முடித்துக்கொண்டு சுத்திசெய்து தனித்தனியிட்டுமைந்தா, வான்றான ஆறுநீர் படிஎண்ணான்குவடிகட்டிவிட் டடுப்பிலேற்றிடாய்நீ, ஈன்றாலசிறுதீயிட் டெரித்துவைத்து எட்டொன்றாய் நாலுபடியிறுத்திடாயே. (௱௨௩)

இறுத்திட்டக் கியாழ்நதி லெள்ளியெண்ணெயிருமூன்று படியாவின் னெய்தானிரண்டு, முறைதிட்டங் கப்பாதே தனித்தனியிட்டு முடக்கொற்றான் முசுட்டைநொச்சி பொன்னாங்காணி, கேறைதிட்டசீசாலைசிந்திற்றண்டுகற்றாழை கண்ணீர்விட்டான் வாதங்கொல்லி, மிறைத்திட்டவகையொன்றுக்குப்படிச்சாற்விட்டு கோவைவாவின்பால்படிதானிலே. (௱௨௪)

நாலான மிளகுநீர் தான் கூடவாரு நாகனம்பூலாக்கிழங்கு லவங்கப்பத்திரி, மாலாகும் அகில்கந்தங்கேவதாரமண்திஷ்டிலான்மிளகுமாஞ்சியேலம், மேலாகுஞ்சாதிக்காய் கிராம்புகோஷ்டம் வெட்டிவேரஞ்சனக்கல்விளாமிச்சம்வேர், கோலாகுமரமஞ்சள் கொத்தமல்லி குக்கிலுடன் அதிமதுரஞ் செவியகதானே. (௱௨௫)

தானென்ற செண்பகப்பூ லவங்கப்பட்டை தக்கோலந் சதகுப்பைநெல்லிமுள்ளி, தேனென்ற திப்பிலியுங் கடுகுரோகணி சிறுநாகப்பூதேசாவாத்திரேறு, மானென்ற புச்சிலையும் வகையொன்றுக்கு மைங்கனேமுக்கழஞ்சிப் பாலாலாட்டி, ஊனென்ற பொழுத்திற் கலக்கிவிட்டுவுத்தமனே சிறுதீயா லெரிந்திடாயே. (௱௨௬)

எரிக்கையிலேயடிபத்தா நிளகக்காய்ச்சி யிறக்கிடுவாய் மெழுகுபதந்தன்னிற்றேறு, திரிக்கையிலே யபின்புழுகு சவர்க்காரத் தோடு சேருங் கோரோசனைக்கஸ்தூரி தானும், விரிக்கையிலேபச்சைகர்ப்பூரமப்பா விதமொன்றுக் கழஞ்சொன்று வொடியே

செய்து சரிக்கையிலே வடிகலசந் தன்னிற்போட்டுதானிறுத்து தயிலை துமுழுநும்போதே. (௱௩௨)

முழுகவே சிபக்காயப்புவென்னீர் முழுக்கதுவு மொன்றைவிட் டொருகான்முழ்கு, ஈழுகவே திருடநோய் நவிலக்கேளு நயனத்தில்கா சமொடுப் படலமில்லம், ஒழியுமேநீர்ப்பாய்ச்சல் பில்லிவெட்டு முக் தமனே திமிர்தமொடு குவளைவீக்கம், அழியுமேபுழுவெட்டு மெரிச்சலமி ழ்தம்கண்பூவுங் கண்குருடுகைக்கேட்ப்போமே. (௱௩௩)

### மகாதிரிப்பல்லாதி தயிலம்.

கடுகியே நயனநோய் தொண்ணூற்றாறுஞ் சாணுமலேர்டுமடாக ண்டுசேது, முடுகியேவருஞ்சிரசு ரோகமல்லால் முழிமுறுக்கிகட்டுதிற ருவிலவாதம், படியவேமகாதிரி பல்லாதிக்கன்னை பாடுகிறேன் மாணுக்கா ள்வணிந்துகேளு, மிடியவேதிரிபலையுக் வேங்கைகாத்துவியல்பானமு டக்கொற்றான் வில்லவேறே. (௱௩௪)

வேர்ப்பாலுமணக்கு சிக்திற்றன்டு விளங்கவேதாழையுடன் வீழு திஞ்ஞெடு, பாரப்பா வகையொன்றுப் பலந்தான்பத்து பாலகனே குறுக் கொட்டிப்பலமுன்றைாந்து, காரப்பா அதிமதுரம் தேவதாரங்கனபிள குஅ முக்குறுகன்னிக்மேனை, சீரப்பா அகில்வகைக்குப்பலந்தானேந்துசோ வேயிடித்தொன்றாய் பாண்டத்தாற்றே. (௱௩௫)

ஊட்டியே யறுநான்கு படிநீர்விட்டு வுக்தமனே எட்டொன்றாய் க்சுறிக்கிவாங்கி, கூட்டுவாய ரண்டு படி யாவின்பாலைக் குறையாமல்நல் லெண்ணெய்ப் படிகான்ரண்டு குட்டியேகாளிக்குட் கொதிக்தும்போது சொல்லுவேன் சற்சவலைசநூலக்கமாக, நட்டுவாயதிமதுரமிலவங்கமே லப்பாகப்பூப்பின்னைப்பூ கோஷ்டந்தானே. (௱௩௬)

தானை யிதுவேலிசொழுந்து பச்சை தகரமொடுவிலாமிச்சு மூத் தச்செப்பி, நாணை அப்பிரேகம் பவளப்புத்துநாகணமுன் குக்திருக்கம் துவணியாக, வாணை மும்மஞ்சள் சாம்பிராணி மாஞ்சிவொடு குங்கிலிய மஞ்சனைக்கல், தேனைகற்பூரஞ் சிந்தூரத்தைசெஞ் சிறக்கவிருசந்தன முமகிலுமாமே. (௱௩௭)

அகிலமொடு மஞ்சிருஷ்டி தேவதார மப்பனே மதிமுகமும்வகை யொன்றுக்கு, குதிலாதே வராகனிடை ரண்டுபோடு இகொம்பாக்குரண டிபலமிகியாழுமவாங்கி, புகலாதே பால்தெளிலவைத்துச்சேர்த்துப் புண

ணியனே பதமறிந்து வடித்துக்கொண்டு, திகழாதேசியக்கா யாப்புவெ
ண்ணீர் நீமுழுகில்தீரும்நோய் திகழ்ந்துவோமே. (௱௩௮)

திகழுமே கன்னேசிக்கன்னப்புத்து நீர்ச்சூலைக்கபாலவலி மண்
டைக்குத்து, இகழவேவரும் பீனிசைநாசிற்சூலைஇருசெவிக்குற்றமொ
டுஐயங்கும்வாய்வு, அகலவே வாதமொடு சூலைதானு மப்பனேதந்தவலி
யக்காங்கள், புகலவேசிரசுநோ யெல்லாந்தீரும் புண்ணியனே யித்தயில
ம்புகழ்ந்துசெய்யே. (௱௩௯)

சன்னிவாதத்திற்கு அமுர்தவல்லித்தயிலம்.

செய்யவே அமூர்தவல்லித் தயிலமொன்று செப்பக்கேள் சன்னி
வாதம்சுரங்களுக்கும, பையவே அமுர்தவல்லிப் பெரியதாகப்பலமிருப
திடித்துநீ பதக்குரண்டு, உய்யவேசிறுதியாயெரித்துவாங்கி யுறுதியாய்
ப்படியாக்கிவடித்துக்கொண்டு, நையவேகாடிபடி
ரண்டுசேர்த்து நல்லெண்ணெய்ப்படிரண்டு கூடவாரே. (௱௪௰)

வாரப்பா நாழிக்குள்கொதிக்கும்போது மைந்தனே அமுக்கிராவே
ருமூலம், சேரப்பாபதினாறு கழஞ்சரைத்து சேர்த்துநீபதம்பார்த்து வ
டித்துக்கொண்டு நேரப்பாதயிலமிட்டு முழுகவெண்ணீர் நோமப்புச்சிய
க்காய்நினைவாய்க்கேளு, காரப்பாபுளிமோரைத் தள்ளவேண்டுங்கடுஞ்ச
ன்னிவாதசுரங் கழன்றுபோமே. (௱௪௧)

நாக்கு சூலைக்குத் தயிலம்.

போமப்பா பலசுரங்கள் மாறல்தானும் பொல்லாத விஷசுரங்களெ
ல்லாந்தீரும்; காமப்பா விதனத்தைத் தள்ளவேண்டுங் கருநாக்கிற்சூலை
க்குத்தயிலங்கேளு; ஆமப்பா ஆற்றுநீர் படிகாலெட்டு அளந்துவிட்டு
க்குறிக்கியதைப் படிகாலென்று, காமப்பாபொடிதலைமயுந் தனித்திடி
த்துதனிச்சாறு படியொன்று தாக்கிடாயே. (௱௪௨)

தாக்கியே சண்கறுத்ததேங்காய்நாலு கானுடைத்து மெல்லினமா
ய்த்திருகிச்சேரு, நோக்கியேயடுப்பேற்றி எரிக்கும்போது நுகலுவேன்
மெழுகுபதந் தன்னில்வாங்கி, தேக்கியேகோணிதனி லிட்டுக்கொண்டு
சணதிலே கிட்டிகட்டிப் பிழிந்தாயாகில், பாக்கியே யில்லாமல் தயில
மெல்லாம் பதறுதே குப்பிதனி லடைத்துக்கொள்ளே. (௱௪௩)

கொள்ளவே கழஞ்சியொன்று யந்திசந்திக் குடித்திட்டால் நாக்கி
ல்வருஞ் சூலைதானும் மெள்ளவே நாக்கரிக்குங் கிரந்திபுண்

கன் மேல்வாயைப்பற்றிவருமொடுவைப்புண்ணூர், அள்ளவேயேகரிக்குங்கிரந்தியோடு தொடர்ந்துவரும்புண்ணுக்குக்கிரந்தி யல்லால், விள்ளவேவாயில்வருமணிரணகுலை யிரண்டோடும்பத்தியமாய்வேண்டுவேண்டே. (௱௪௪)

## மகாவலாதித்தயிலம்.

வேண்டிமகாவலாதித்தயிலத்தைகேளு மிருந்தபித்தகாசமொடு சிரசுநோய்க்கும், பூண்டதொருவலமிலாமிச்சம்வேரும் புகழ்வெட்டிவேருடனே மருதன்பட்டை, நீண்டகுருந் தொட்டிவேர் கொன்றைப்பட்டை நேரிலந்தைவேப்பந்தோல் ஆவாரைவேர்ப் பட்டை, ஆண்டஅத்தியாலரசு அகிலின்பட்டை ஆத்தாசுபட்டைநாவல்பட்டையாமே. ()

ஆமடாஅழிஞ்சிலொடுகடப்பம்பட்டைபயிர்தவல்லி பதினெட்டுவகையுஞ்சேரு, தாமடாவகைகைப்ப்துப்பலமிடித்துத் தண்ணீருமரக்காலெட்டளந்துவிட்டு, நாமடா வெட்டொன்றாய்க்குறுக்கிவாங்கிநலமாக வடிகட்டித் தாழிற்சேர்த்து, ஓமடாநல்லெண்ணெய்குறுணிவாரு வுந்தமனேயாவின்பால் குறுணிதானே. (௱௪௬)

தானனவிளநீரோபடிதானெட்டு தான்விட்டுக்கற்கவகைசாற்றக்கேளு, கானனவேலமதிமதுரமஞ்சள் கடுதரோகணியாத்தைசெண்பகப்பூ, ஊனனகாடில்வெண்ணெய்சித்தரத்தை யுடன்வசம்பு செவ்வலரிதேவதாரம், தேனனசீரகமுமகரப்பூவுந் திருகடுகுமரமஞ்சள் சிறுதேக்காமே. (௱௪௭)

ஆமப்பாஅதிவிடையங்கஸ்தூரிமஞ்சள் அமுக்கிறாகண்ணரிகுருந்தொட்டிவேருங், தாமப்பாலகசுவாசிகிராமபுமுத்தக் தக்கோலங்கார்போகங்கடுகுகோஷ்டம், நாமப்பூயச்சிலைவாயுளுவையோடு நாகப்பூ மஞ்சணம்வெட்பாலையோடு, போமப்பாகுறிஞ்சனுடனேம்பத் தொன்றும் பொருந்தவே வகைக்குரண்டுகழஞ்சுதூக்கே. (௱௪௮)

தூக்கியேயரைத்துஎண்ணெய்தன்னிற்சேர்த்து தும்பிமுகன் பூசைசெய்து அடுப்பிலேற்றி, தாக்கியேசிறு தீயாயெடுத்துக்கிண்டித் தான்கடுகுபதந்தன்னில் வடிக்கக்கேளு, பாக்கியேபொன்மெழுகுகுங்குமப்பூட்டம் பச்சைக்கர்ப்பூரமொடுசாம்பிராணி; தீக்கியேவகைக்கழஞ்சுசிறுத்துக்கொண்டு நிசமானகஸ்தூரிகிராகனெடையளவே. (௱௪௯)

அரைத்துநீவடிகலசந்தன்னிலிட்டு அப்பனேதயிலத்தைவடித்து
க்கொண்டு, சித்திலேதான்பொருந்தகடிகையைந்து சென்றபின்பு நீ
யக்காயனைப், வெந்நீர்; நித்துமேதான்முழுதும்பத்தியம்வேண்டும் நி
லைபண ரோகத்துக்காவின்பாலாந், நூத்துமேமற்றுள்ளநோய்க்குவெ
ந்நீர் சோற்றுக்குச்சிற்றுப்புவறுத்துக்கூட்டே. (௱௫௰)

கூட்டுவாய்சிறுகீரை முருங்கைப்பிஞ்சு கொத்துமல்லி வழுதலம்
பிஞ்சவரைப்பிஞ்சு, நீட்டுவாய்துவரையிடபருப்புமாகுஞ் சிறுபயறுப
ருப்போடுபுடலம்பிஞ்சாம், தேட்டிலேமற்றொன்றுமாகா தப்பா தின்ன
டாதே புளிப்பினிப்புகைப்புமாகா, நாட்டியேநாலுநாளைக்கொருகால்மு
ழுக நலமாகத்தீரும்நோய்நாட்டங்கேளே. (௱௫௧

கேளடாமண்டையிடிகபாலக்குத்து கெடியானசிறுசிறுப்புச்சுவா
சகாசம், தாளடாதனிலிறங்குந்தச்சூலை தலைநீருங்கண்ணோசிகன்ன
யபுத்து, கேளடாவிப்புருதிகண்டமாலை கெடிசூலைகுவளைவருங் கபால
ச்சூலை, நாளடாநயனத்தின்படலங்காசம் நாடரிய பித்தத்தின் காசம்
போமே. (௱௫௨)

போகுமேகண்டத்தின்மேலேவந்த பொல்லாதவாயிரத் தெட்டு
நோயும், ஏகுமேகர்மத்தைநிவர்த்திசெய்தால் எழுந்தநோய்தீருமடா வ
ழைமக்காள், நோகவேகர்மங்கள்தீராவிட்டால் நோய்களந்தமருந்தையு
ண்ணுந்தீராதப்பா, பாருமேதருமஞ்செய்திருந்தானாகில் பாலகர்க்குக்க
ருமமில்லையறிந்துசெய்யே. (௱௫௩

செய்யவேசயனநோயெல்லாந்தீருஞ் சிரசிலேவந்தபிணி யனைத்து
ம்போகும், வையவேகழுத்தின்மேல் வியாதியெல்லாம் நாலுநாள்மாற
லொடுவெதுப்புத்தீரும், பையவேவாதபித்தசிலேட்டுமம்போம் பாங்கா
கச்சுவாசமதுமறக்குங்கண்டாய், ஐயனேகையில் நெல்லிக்கனி யிருக்க
அலையவேவேண்டாங்கா ணறிந்துபாரே. (௱௫௪)

## பித்தத்திற்குஅமிர்தவல்லாதித்தயிலம்.

அறிந்துபித்தந்தீருதற்குஅப்பாகேளு அமிர்தாதிதயிலமென்னும
தற்குநாமம், இறந்தவொருஅமிர்தவல்லிபலத்தைக்கேளு செப்பியதுகா
லுபத்துச்சிதைத்துநன்றாய் சிறந்தகன்னிச்சாறுபடி யொன்றதாகச் சீ
ரானசுத்திநீர்தான்பலமோபத்து, பிறிந்திதனையிடித்துவொருபாண்டத்தி
ட்டுப்பின்பதக்குநீர்விட்டுவெட்டொன்றுக்கே. (௱௫௫)

ஆக்கடாகியாழமொன்றுகல்லெண்ணெயதற்குநேர்விட்டுநீயடுப்பிலேற்றி, தாக்கடா அதிமதுரந்தேவதாரஞ் சந்தனம்பூலாக்கிழங்கு கடுகுரோகணி, நோக்கடாதிரிபலையுமண்திஷ்டியேலம நோரம்பச்சிலை பாத்தை மூத்தக்காசு, வாக்கடாகோஷ்டமதில்வெட்டிவேரு மைந்தனே விலாமிச்சுசித்தரத்தை, நீக்கடாதாமரையின்வளையமோதம் நேரிலவம்பட்டைசடாமாஞ்சில்தானே. (௱௫௬)

தானென்றதக்கோலம்வகையொன்றுக்கு சமனுக்கிராகவிடையளாத்துப்போடு, தேனென்றமெழுகுபதமுதிரும்போது சேணத்திலேவடித்தப்பாமுழுகச்சொல்லு; காணென்றசீயககாயமைப்புவெருநீர் கட்டாகமுழுவிவர வுடம்புபாழ்ாம், வானென்றபித்தத்தின்கதிப்புக் கண்ணேய் மாறலென்றசுரமெல்லாம்வாராதென்னே. (௱௫௭)

## அமிர்தசஞ்சீவித்தயிலம்.

வாராமலொழிவதற்குஅமிர்தசாலை மைந்தனே தயிலமொன்றுவழுந்தக்கேளு, தோராமல்சீந்திலொடுபலமோமத்து சொல்லுமூத்தம்மன்னரிவிலாமிச்சம்வேர், நோகப்பலமைந்துமிடித்துப்போட்டு நீர்விட்டுஎட்டொன்றாய்ப்படிகாணென்று, ஏராமல்சீந்திற்சாற்படிதானென்று எண்ணெய்படியொன்றுவிட்டுக்கற்கங்கேளே. (௱௫௮)

கேளடாகைச்சோலஞ்செங்கிளநீர்கோஷ்டம் கெடியானபுழுகுசட்டமாஞ்சிலேலம்; காளடாசாதிக்காய்கட்டில்வெண்ணெய்நாகப்பூ செண்பகப்பூஅகில்நன்னாரி, வாளடா அதிவிடயமிலவங்கப்பட்டை வசுவாசிதிருக்லவிமதுரந்தானும், வேளடாசந்தனம்பச்சிலைதக்கோலம் மேலாம்கஞ்சனவளையம்விராகனென்றே. (௱௫௯)

ஒன்றாகயளாத்திட்டுஇளகக்காய்ச்சி உயர்கடுகுபதந்தன்னில்வடித்துக்கொண்டு, குன்றாமல்சிரசுதனில்தேய்த்துமூழ்கக் குணமாகும்பித்தத்தாலெழுந்தகாசம், நின்றாமல்பலபிணியுந்தீரும்பாரு நிலையசனவில்வாதிதயிலஞ்சேளு, பொன்றாதவேங்கைமிட்டைச்சீந்தில் புகழ்வில்வங்குருந்தோட்டிவேருமாமே. (௱௬௰)

## மகாவில்வாதித்தயிலம்.

வேருடனேவகைவகைக்குப்பலந்தான்மூன்று விதமாகவிடித்துநீராண்டத்திட்டு, நேருடனேசுத்தசலம்படிதானெட்டு நீர்க்குருக்கும்படியொன்றுவடித்துவாங்கி, வாருநீல்லெண்ணெய்படிதானென்றுவணமான ஆவின்பால் படிதானென்று, சேருமேகொதிக்கையிலேகற்கந்

கேளு திரிபலையுந்திமதுரமேலந்தானே. (௱௬௧)

ஏலமொடுஇலவங்கம் அமுக்கிருவேர் இருவேலியிலாமிச்சம்முத்த க்காசு. கோலமுடன்மாமஞ்சள்தேவதாரம் கோஷ்டமொடுசாதிக்காய் சாதிப்பத்திரி; சாலமஞ்சள்சுக்கரக்கைதசெண்பகப்பூசடாமாஞ்சிற்கைச் சோலமபுழுகுசட்டம்; மாலிநீரானவாங்கூகைகீறு மலர்க்காயுநெய்த ல் சந்தனமுமாமே. (௱௬௨)

ஆமப்பாகுங்குமப்பூச்சித்தரத்தை அப்பனேகாமனாயின்விளையத் தோடு; நாமப்பாகுருந்தொட்டிவேருமல்லால் நற்சீரகங்கரிய சீரகத்த னோடு; தாமப்பாவங்ககைக்குவகைகவிராகனென்று தனித்தாவின் பால்வி ட்டு அரைத்துச்சேரு; ஓமப்பாமெழுகுபதமாகும்போது உத்தமனேவி ட்டிகட்டிப் பிழிந்திடாயே. (௱௬௩

பிழிந்திட்டதயிலமதைமுழுகும்போது புண்ணியனே நீருநோய் புகலக்கேளு; வழிந்திட்டபீனிசமுங்கண்ணரோக மக்களே சிரசுநோய் நேற்றிவாய்வு; இழிந்திட்டநயனத்தின்ரோகமெல்லா மிடரகலும்புளிப்பு கையுஞ்சூரக்தள்ளு; தழிந்திட்டதந்தத்தின்வாய்வுதீரும் தப்பாதுதயில த்தின்தன்மைபாரே. (௱௬௪)

## கண்ணரோகத்திற்குத்தயிலம்.

பாரப்பாகண்ணத்தின்ரோகமெல்லாம் பறந்தோடத்தயில மொன் று பகரக்கேளு; சாரப்பாகொச்சியொடுமுருக்கூமத்தை கைதவேளைபச் சைமஞ்சளிஞ்சிச்சாறு; நேரப்பாவாழையிட கிழங்குச்சாறு நிலப்பனை யின்கிழங்குகையான்றகரைச்சாறு; காரப்பாபெருங்குரும்பை வெள்வெ ங்காயம் கனத்துளசிவகைக்குச்சாறப்படிகாலாமே. (௱௬௫

காலாகும் நல்லெண்ணெய்படிநான்காண்டு கலந்துவிடுபாண்டத்தி ற்கற்கங்கேளு; மேலாகுந்திரிகடுகுசித்திரமூல மிக்கநயகடுகுகோஷ்ட மிந்துப்போடு; மாலாகும்வகைக்கிரண்டுகழஞ்சு தூக்குமைந்தனேயரை த்திட்டுக்கலக்கிக்காய்ச்சி; நாலாநாள்மெழுகுபதந்தன்னில்வாங்கிநன்று வடித்துவைத்துச்சொல்லக்கேளே. (௱௬௬)

சொல்லுவேன்காதில்விட்டுச்சிரசில்தேய்த்துச் சுடுவெந்நீர்சீயக் காயரைப்புமாகும்; அல்லவேகண்ணேசைகண்ணப்புத்து அழற்கண்ணச் சூலையொடு அரிகிரந்தி கொல்லவேவந்ததொரு காசனோடு கொடுமை செய்யும்விப்புருதிபிளவைதானும் இல்லையேயென்னத்தி விருபத்தொன் று எழுரோகங்காதில்சீழில்லைதானே. (௱௬௭

## அதிகோணத்தயிலம்.

தானென்ற விடாசுரங்களெல்லாந்தீருஞ் சாற்றுவேன் அதிகோணை த்தயிலந்தன்னை, ஏனென்ற வெருகினிடகிழங்குதண்டு இலையுடனே பலம்பத்து விஞ்சவே சேரு, தேனென்ற குருந்தொட்டி யமுக்குருவே ர்சீந்திலொடு சாரணைவேர் வகையொன்றுக்கு, மானென்ற பலமூன் றுமிடித்துப்பாண்டமதனிலிட்டுந் தண்ணீருமாக்கால்படலே. (௱௬௮)

காலுமே குறுக்கிப்பது படிதான்மூண்டு நல்லாவின் அஸ்திரஸ்து ப டிதான்ரண்டு, சாலுமேவெள்ளாட்டுப் பாலிரண்டு தண்ணிலிட்டு கல் லெண்ணெய்ப்படி நான்ரண்டு, ஏலுமேகாகமதி சுக்குச்சிந்தி விலவங்க மித்துப்புக்குக்கிலமுத்தானும்; போலுமே சாரணைவேர் மதுரங்கோஷ டம்புகழ்வசம்பு மஞ்சிஷ்டி முத்தக்காசே. (௱௬௯)

முத்தமொடு சித்தரத்தை தேவதாரம் முப்பஞ்சன் சிறுகீரைவேர் ராம்பு, சிற்றுமுட்டி வில்வவேர், அமுக்குரா வெற்றிப்பியுஞ் சந்தன மூலாமிச்சமவேர், புத்தியுடன் கஞ்சூரி மிளகிரணுடும் பொருலவங் கப்பத்திரியும் வகையொன்றுக்கு, குற்றமதுவில்லாமல் கழஞ்சியொன் றுகுறையாம லாட்டிவிட விலாட்டே. (௱௭௰)

ஆட்டியே கரைத்துவிட்டு அடிபற்றாமல் அதிட்பேற்றிக் கிண்டி யேசிறுதியாக; மூட்டியே மெழுகுபதமாகும்போது முப்பதத்தோகான் பூசைசெய்து வடித்துக்கொண்டு, தீட்டியே சிபக்காயமைப்பு வெந்நீ ர்நிறமாகமுழுகிவரத் தீரும்நோய்கள், கேட்டியோ வாதசுரம பித்தசுர வெப்புங்கிளைத்து வரும்விடிசுரமுமகலுங்கேளே. (௱௭௧)

## சீதேவித்தயிலம்.

கேளுநீவிடாதசுர மூன்றுமாறல் கேடுகெட்டசதுர்சீத மிரண்டு மாறல், காளுநீ யொன்றைவிட்ட மாறலோடு சகலசுரமனைத்துந் தான் றுண்டியோடும், வாளுநீ சீதேவித்தயிலந்தேளு மைந்தனே சீதாசெங்க ழுநீர்ச்சாறு, நாளுநீ படிமூன்று அளந்துவிட்டு கல்லெண்ணெய்ப் படி மூன்றுகூடவாமே. (௱௭௨)

கூடவே கற்கமது மதுரங்கோஷ்டம் குணமானவேலத்தின்லவங் கப்பட்டை-தேடவேமஞ்சிஷ்டி கடுகுரோகணியுஞ் செண்பகப்பூச்ச ந்தனமு மிலாமிச்சம்வேர்- காடவே தண்ணீர்விட்டான் கிழங்கு முத்தங் தாமரையின் வளையங் கஸ்தூரிமஞ்சள்-காடவே செங்கழுநீர் கிழங்கிலே கெஞ்சூரிவெட்டிவேர் நவிலுந்தானே. (௱௭௩)

நவிலவேவகைவகைக்குவிராகனிடைமூன்று நன்றாக யிடித்தவா
த்தெண்ணெய்சேர்த்து, கவியவேகாய்ச்சுபத மெழுகுமானால் கலச
த்திலடைத்துநீ மூழுதும்போது, தவிருமேவிடாதசுரக்கொதிப்புவெப்
புத் தண்ணீரில்தாகமோடு சண்டிக்காய்ச்சல்- புவியிலே வந்தசுரமறுப
த்துநாலும் பொல்லாத சுரங்களெல்லா மில்லாதெண்ணே. (௱௭௪)

## ஏரண்டத்தயிலம் கீராம்பல்மகோதரத்திற்கு.

எண்ணவே மகோதரம் கீராம்பல்தீர இயம்புவேன் ஏரண்டத்தயி
லமொன்று- பண்ணவே முடக்கொற்றான் சமூலக்கேளு பலமுப்பகா
குமேசிற்றாமுட்டி- துண்ணவே பதினோர்து பலங்காணப்பா சொல்சிற்
றாமணக்குமவே ரதினிற்பாதி- முண்ணவேமுன்னிவே ரிலவம்பட்டை
முருங்கவேர் பட்டையொடு சிவிதைதானே. (௱௭௫)

சிவிதைவேர் வீழியொடு மூதியார்கூந்தல் செம்முள்ளிகொடிவே
லிதேவதாரம்- நெவிலவே நெரிஞ்சிவேர் தண்ணீர்மிட்டான் நேர்வெள்
ளைச்சாரணைவேர் கழல்பருப்பு- நவிலவேகொள்ளுடனே வகையொன்
றுக்கு நாட்டுவாய் பலமூன்று விடித்துப்போட்டு தவிராமல்தண்ணீர்
நாலுகுறுணிவிட்டு தான்குறுக்கியெட்டொன்றாயிருத்திடாயே. ()

இருத்திட்ட இயாழமது படிதானாலு இலைக்கள்ளிப்பால் சதுரக்
கள்ளிப்பாலும்- பிறித்திட்டுப்படிதான்கா லளந்துவிட்டுப் பெருமை
பெறுஆவின்பால் படிதானாலு-குறித்திட்ட தேங்காய்ப்பால் படிதானா
லு குறையாதுத்தாமணிச்சாற்படிதானாலு- சிறுநகிட்டயோண்டத்தெ
ண்ணெய்நாலு திறமான பேய்க்குமட்டிச் சாறுநாலே. (௱௭௭)

சாறுடனே வெண்ணெய்ப்பால்தியாழக்கோடுதாளிதனி லிட்டுநீச
லித்திடாமல்- ஊறிடவே மூன்றுநாளான பின்பு உத்தமனேகற்கவகை
யுனாக்கக்கேளு- வீறுடனே திரிகடுகு சிநாமூல மேலான சாதிக்காய்
செவியமேலவ- கூறிடவே பெருங்காயம்வசமபுலுமக்கொத்துமல்லிசத
குப்பையிந்துப்பெண்ணே. (௱௭௮)

இந்துவொடு பொட்ளுப்பு அமுக்குறாவேர் மியஸான அ
திமதுர மிலவங்கப்பட்டை மூக்குசடா மாஞ்சில்லா லுளுவை
தாளு மொழியாத்தை வாலவேர் சித்தரத்தை, கந்தமடா நன்
னாரி அகிலிக்ளெறி சண்டதிப்பிலிவகைக்குக் கழஞ்சமூன்று - அக்கமு

டன் அரைத்திட்டு வுலரவைத்து அஞ்சாநாள் மெழுகுபதந் தன்னில் வாங்கே. (௫௭௯)

வாங்கியே தேகபலம் தன்னைக்கண்டு வைந்தனேயுள்ளுக்குக்கொடுத்தாயானால்; தேங்கியேயிருந்தபித்தநீர்களெல்லாஞ் சணத்திலேபேதியினால் வாங்கும்பாரு, ஓங்கியேதிரியாதே மிளகுநீரு மிளகுகோழிச்சாறுக்குங்கொள்ளுநாருப, தாங்கியே திரும்நோய் மகோதரங்கள் சளஞ்செய்யும் அஷ்டகுன்மந் தவிருந்தானே. (௫௮௰)

தானென்ற விஷபாகஞ் சவுசெண்டை தான்வைப்பும் பார்வையோடு அருவைக்காலும், வேனென்ற நீராம்பல் பெருவயிறிரேடு விப்புருதி பாண்டுடனே யிளப்புரோகம், கோனென்றவுதிரத்தின் கட்டால்வந்த கொடுமைசெய்யுநோயெல்லாங்குடிபோமபாரு, ஊனென்றவுடம்பிற்குத்தலையில்தேய்க்கவுத்தமனே பிணியில்லாதோடுந்தானே.

(செம்பிராத்தயிலம்.)

தானான செம்பிராத் தயிலஞ்சேரு தலைக்குற்றுங் காப்பனேடு குலைக்கீர, மானான செம்பிரானிலையுஞ்சாறு மகிழிலைச்சாறவுரியோடு அனரிச்சாறுங், தேனான சங்கினிடம்முக்கின்சாறுஞ் செப்புபுளியிலைநாரத் தனிலையின்சாறும், கானான ஆத்தலரியிலைபின்சாறுங் கணக்குடனே வகைக்கு அனாப்படிச்சாறுமே. (௫௮௨)

சாறான வெட்டிவேரைச் சாறுக்கூட்டி தனிப்பசுவின்பாலதுவும்படிதான்ரண்டு, கூறான நெல்லெண்ணெய்ப்படிதான்ரண்டு கூடவிட்டுத்தாளிதனில் கற்கங்கேளு வீறான ஜாதிக்காயேலங்கோஷ்டம் மேனான மூம்மஞ்சள் குங்குமப்பூ, ஈறானமச்சிலைபிலாமிச்சம்வேர் இருவேலியிமதுராம் அழிஞ்சிவித்தே (௫௮௩)

வித்தானகடுகுதிரிபலை மஞ்சிஷ்டி மிகுலவங்கப் பட்டையொடு லவங்கப்பத்திரி, சற்றான அழிஞ்சிவேர்ப்பட்டை தானும் சந்தனமுமகிலமொடுமிளகுங்கூட, சிற்றான செஞ்சந் தணத்தோடு சேரவேவகைவகைக்குக்கழஞ்சியொன்று, முற்றானபால்விட்டு மைபோலாட்டி முன்றயிலந்தன்னிலிட்டு அடுப்பிலேற்றே. (௫௮௪)

ஏற்றியேமெழுகுபதமுதிரும்போது இறுத்திடுவாய்கலசத்தி லின்னஞ்சேரு, தேற்றியேதயிலமதைதேய்த்துநீயும் சீயக்காய்னைப்பு வெந்நீர் முழுகச்சொல்லு, சாற்றியேபத்தியந்தான் தயிர்பால்மோராந் தனித்

துவளாப்பருப்போடு பசுநெய்யாகும், மாற்றுவாய்புகையிலையும்புளியுந் தன்னுமைந்தனேயொன்றைவிட்டொருநாள்மூழ்கே. (௱௮௫)

மூழ்கையிலேயெவர்க்கோ பரிகாரத்தம் மொழியுகிறேன்றிரும் நோய் கபாலகுஷ்டம், வாழகையிலே வெட்டையொடு கபாலக்குத்து மண்டைமிடிபீனிசமோ மாறுந்திரும், தாழ்கையிலேகுட்டத்தின் கிரந் திதீருந் தலையிலேவெடிசிரந்த கபாலசூலை, சூழையிலேகபாலத்தில்க சப்பான்வாயவு தம்பலொடுமூக்குநீர்ப்பாயச்சலும்போமே. (௱௮௬)

போமப்பாகபாலத்தின் இனவுகூட புழுவெட்டுஇருமலுடன் போ க்குந்தீரும், ஓமப்பாமயிர்சுருத்துவளரும்பாருவுத்தமனேநயனத்திலுறு த்தல்தீரும், தாமப்பாசிரசிலேபமபித்தமெல்லாந் கண்டுடனே போகும ஈகமிலந்தன்னில், சாமப்பாசொல்லிவிட்டோமிந்தநூலில்நல்லோர்கள் திந்துசெய்யநன்மையாமே. (௱௮௭)

(ரவுத்திரம்பிளவைக்குத் தயிலம்.)

நன்மையில்லை பவுத்திரங்கள்பிளவைக்கெல்லாம் நலமாகும்பு டத்தயிலம நவிலக்கேளு, வன்மையில்லா மனிதரிட மண்டையோடு வ ளர்சிமருணைக்கள்முதலுபுங்கன்முத்து, தன்மையிலாதிருப்பையுடப ருப்புக்கூட்டிச்சாற்றுபுளிமாதநிணிடவயிரப்பட்டை; புனமையில்லாதி ந்தவனகமருந்து ஐந்தும் பொருந்தவகை யொன்றுபல மைப்பதாமே. ()

ஐம்பதாய் சிறுத்திடித்துத்தூளேயாக்கிஆட்டுவாய் புங்கன்வேர்ப் பாலைவிட்டு; தென்பதால் பாக்குப்போல் வில்லைதட்டித்திறமாக ரவிதனிலேகாய்ந்தபின்பு, இன்பமாயப்பானைதனிலடைத்துககொண்டுவெ ண்மக்கான் வேயபுசக்கு குச்சிதனனில, பின்பதாய்மேல் பாப்பிப்பா னைவாயகக்குப் பிலக்கவேசடடிகொண்டுகவிழ்ததுமூடே. (௱௮௯)

மூடினதோர் சட்டிகடுத்தமர்தான்மூன்று மூன்னிட்டுச்சீலைமண் செய்துலர்ந்தபின்பு, நாடினதோர்குழிவெட்டிப் பழக்கஞ்செய்து நற்க லசந்தன்னில்வைத்துகவசமவாயில், தேடினதோர்மருந்தடைத்தப் பா ண்டஞ்சட்டி சேராதபர்கலசம்மடுமையத்தில்கூடினதோர்தமரிட்ட சட்டித்துறு கூறுவேன்கலசவாய்கூட்டித்தானே. (௱௯௰)

கூட்டியே சாணிரண்ணும் பிசைந்துஅப்பி கொடுத்தியாற் சாம பட்டு மெரித்தாயானல் காட்டியே யபானையடி சிலக் தியே பசறு

ஸ்ஸோதிக் குளிர்ந்தபின் பிருக்துபாரு, நீட்டியேசேழ்க்சலசம் தயிலம் நிற்கும் நினைவாக வெடுத்தந்தத் தயிலந்தன்னில், பூட்டியேசமஸ்சித்தா மணக்கினெண்ணெய்ப்பு கட்டியேசீர்ச்சுண்டக் காய்ச்சுகாச்சே. ()

காய்ச்சியேகுப்பிதனி லடைத்துக்கொண்டு கருத்துடனே பிருக் குமந்தபாண்டத்திட்டு, வாய்ச்சுதேபதிற்றயிலம் விட்டுமைந்தாவாயில் புன்னாங்குழலைவைத்துக் காட்டியேதான்,பாய்ச்சவேபுரைவாயில் குழல்வாய்ச்சேர்த்துப் பதருமலதைப்மார்த்துத் தயிலந்தனை,போச்சுதே புரைபுகழ்ந்துப் புண்ணுமாதிப் போகுமேகண்களிலும் தடவச்சொல்லே. (௱௯௨)

சொல்லுவேனென்றைவிட்டு வொருநாள்பாச்சு துயர்திரும்வியாதியின்னஞ் சொல்லக்கேளு, அல்லவே புரையோட்டம் பவுத்திரங்களதையாப்பு விப்புருதிகண்டமாலை, சொல்லவே பிளவைதுடை வாலைக் குட்டக் திரூமேமூலபத்து வொடுலைவப்புண்கள். கொல்லவேவருமோடு விப்புருதிமுதலாய்க் கொண்டபலவிரணங்களெல்லாம்போமே.(௱௯௩)

வோகுமேபுண்புரைக ளெல்லாந்திரும் புரைவாயிற்பஞ்சிலைவத் தடைக்கவேண்டும, சாகுமேஆறுக அளிபுண்ணெல்லாம் தடவவேயுலருமடா சாற்றக்கேளு, ஏகுமேபுளிபுகை காப்பான்பண்டம் யேற்றுத் சடுதியிலே யிடுக்கந்திரும், ஆகுமேபத்தியந்தா னறிந்துசெய்தா லவர்களுக்குப்பிணியில்லா தகலுந்தானே. (௱௯௪)

## உள்ளியெண்ணெய்.

அகலுமேஉள்ளியா மணக்கினெண்ணெ பறையுதேன் வெள்ளுள்ளிப்பலனுமப்பா, புகலுவேனெண்குறுணிச்சலந்தான்விட்டுப் புண்ணியனே யெட்டொன்றுய்க் குறுக்கிவாங்கி, நிகலவே பிசைந்துவடித் திருத்துக்கொண்டு நினைவாகப்பசுவின்னீர் படிதான்ரண்டு இகலுசித் தாமணக்கெண்ணெய் படியிரண்டு யிதிற்சதுரக் கள்ளிப்பா லவுரியுஞ்சேரோ. (௱௯௫)

சேர்த்துநீபாண்டத்தி லூறும்போது சேர்வதற்கு கற்கவகைதேவதாரம்,போர்த்துநீ வசம்புகோஷ்ட முருங்கைவேற்தோல் வபுங்கன்வேற்கருங்கொள்ளு சித்ரமூலம்,ஏர்த்துநீ திரிகடுகுபெருங்காயந்தா னிந்துப்புபொட்டுப்பு வளையலுப்பு, ஆர்த்துநீதிரியலைப்பு மிலப்பட்டை ஆனைத்திப்பிலி தேசாவாமூங்காணே. (௱௯௬)

காணவேதகரமொடுசெந்தியுப்புக்கல்லுப்புக்கிரண்டுவிராகனிகட்டியோடு, தோணவேயடுப்பேற்றி யெரிநேர்ப்பாகச் சொல்மெழுகுபதத்திருந்துவடித்துக்கொள்ள, காணவே திரும்நோய் குன்மச்சூலை கட்டாகுடலேற்றப் பவுத்திரங்கள், பூணவே புளியோட்டம்வெப்புப்பார்வைபோம்வயற்றிற் குத்துவாதங்கள்போமே. (௱௯௭)

பீனிசத்திற்குசியம்,

போமென்ற பீனிசங்கள்தீர்வதற்குப் புகலுவே னசியமொன்றுகோஷ்டமேலம், ஆமென்றகுங்குமப்பூ லவங்கப்பட்டையதிமதுரங்கருஞ்சீரக மிலவங்கபத்திரி, தாமென்றவிராகனிடை யொன்றுதூக்கித்தறுப்பசுவின்பாலளாகால் படிவிட்டாட்டி, ஓமென்றமாதளம்பூச் சாற்வல்லீத முத்தமனேபசுவின்னெய் படியளாகால்வாரே. (௱௯௮)

வாரப்பாயெறிமெழுகு மதமதாளுல் வாங்கியேநசியமிடு பீனிசமுமோராறுஞ், சோப்பாபித்தத்தின் தலைக்குத்தெல்லாந் திருமேகங்கிளைப்புநயனவாதம், பாரப்பாநீர்ப்பில்லம் விழியிநீர்ப்பாம்ச்சல் பறக்குமடாதிலுகுடாந் தானாவிட்டால், நேரப்பாதேன்கலந்து விட்டுவாநீ நோநீந்துவயீத்தியந்தா னிலேக்கச்செய்யே. (௱௯௯)

அதிசாரகிராணிக்குக்கபாடமாத்திரை.

செய்யடாஅதிசாரக் கிராணிபோக செப்புகிறேன்வச்சிரமாங்கபாடந்தன்னை, அய்யடாஜாதிலிங்கம் அபின்வெண்காரம் அதிவிடையம்சாதிக்காய்மிளகுசுக்கு, பெய்யடாமுள்ளிலவம் பிசினுஞ்சேர்த்துப் பெருமாத்துப்பட்டைக் காட்டாதிப்பூவும், மெய்யடாசமனிறுத்துக் கல்வத்திட்டுவில்வவேற் குடப்பாலேவேற்தோலாமே. (௨௱)

வேடாமுத்தமாங் காசாம்பட்டை மேல்சிறுகாஞ்சொரிவேறும்வெவ்வேறாகப், பாரடாஇயாழமிட்டுச் சாமஞ்சாமம பதருமலரைத்தபின்புஅடைபோல்தட்டி சீரடாவோட்டிலிட் டடுப்பிலேறறித திறமாகவெக்கையதனில்பொழக்குத்து, வாரடாஅடைப்பிரட்டி சாமக்குத்திளைக்ததனேயரைத்தருட்டி வஸ்தையைக்கேளே. (௨௱௧)

கேளடாகஞ்சாவின் சாரம்விட்டுக் கெடியாகச்சிறுசுண்டைக்காய்மட்டுக்தான், தாளடாநிழலுலர்த்திவைத்துக்கொண்டுதப்பாமலனுபானமறிந்துச்செய்தால், வேளடாதிசைக்கிராணிஅதிசாரங்கள் மிரைந்தோ

இம்விமலனு ருமைக்குச்சொன்ஞர் ஈரண்டாயுலகத்தி லுள்ளபேர்க்குகா ணுமாத்தேகஞ் பிணியகலும் நன்மைதானே. (௨௱௨)

## வாதசூலை.

நன்மைகளாந்திசைநோக்கி யாத்திலாபோக நாயறுதான்முதலாக சனியிராகு, இன்மைகளாஞ் சூலமொன் றுநடக்கொட்டார்க்குத் திசை காடிப்போகவென்ருல் செப்பக்கேளு, தன்மைகளாக்குருவாரக்கடிகை வெட்டிச் சனிமதிக்கிகடிகை யிருபது தானப்பா, உன்னதமாய்ரவிவெ ள்ளிப்பனிரண்டாகுமுத்தமனே புதன்செய்வாய்ப் பதினைன்னுமே.()

பதிகாடிமானிடர்கள் சொல்லும்போது பரிதிபது உதையத்தின் முதலதாக, மதிகாடிமூன் றுனாத்த கடிகைதன்னில் வழிநடக்கநன்றெ ன்றுவழுத்தலாம்பார், விதிர டிமதிற்சூலை யில்லையில்லை விமலனுருனா த்தபடிவிளக்கக்கேளு, அதினலே திசைகாண்கில் சூலதோஷமணுகா தெபென்று சொல்லி அறைந்திட்டேனே. (௨௱௪

## வில்வாதிலேகியம்.

அறைந்திடவே வில்வாதி லேகியத்தைக்கேளு அப்பனேவில்வ வேற்பட்டைதள்ளிச், சிறந்திடவேகடுத்தண்டுப்பல முப்பதாகுந்திறமா கவொறுக்கிபிடி பாண்டத்தாட்டி, நிறைந்திடவே அணிசலந்தன்னைவி ட்டுநீருறுக்கிப்படிநாலு வடித்துவாங்கு உறைந்திடவே பனைவெல்லம் பலத்தைக்கேளு உத்தமனே முப்பதுதான் கனாத்துக்காய்ச்சே.(௨௱௫)

காய்ச்சியேபாகுவரும் பருவந்தன்னில் கனமிளகு நாலுபலந்துசுக் குமூன்று, பாய்ச்சுவாய் செவியமது பலமும்ரண்டாம்பருந்தேசாபுரமு ரண்டுமே பலந்தானப்பா; ஆச்சுதேதிப்பிலி நாண்பலமுக்காலாகும் அருந் தாளிப்பத்திரி ஒன்றரையாமப்பா, வோச்சுதே கொடுவேலிப் பட்டை யொன்று பின்புசிறுநாகப்பூப் பலமொன்றுமே. (௨௱௬)

ஒன்றாகு மெட்டுவகை மருந்துமப்பா உறுதிபதி னெந்தோல் பல முமாச்சு, குன்றுமலிடித்து வஸ்திரகாயஞ்செய்துக் கொட்டியேகிண்டி லேகியமாகும்போது, நன்றாகயிறக்கியே ஆறவிட்டுநெல்லதேன்படியொ ன்றுவிட்டுக்கிண்டி, அன்றுடந்தான்திக்கா யளவதாக அக்திசக்திபுண் ணவேயகலும்நோயே. (௨௱௭)

நோயேதுபாண்டுபித்தஞ் சோகைவாத்தி நொறுங்கியே வாயுனோ ய்புசாத்தானும், வாயேதுவுடம்பிலேப்புக் குன்மம்வாய்வு மைந்தனே

அக்கினியா மந்தம்போம்பார், நீயேது மூன்றுதே புளிபுகையுந்தன்று
நின்றுவிடுருசையோகம் வினைக்கொண்ணுது, நீயேதுகாமத்திற் சேர்க்
ஆதானல் தீராதுபிணியொன் றும் தீராதெண்ணே. (உ௭அ)

மகாசிந்தாதிலேகியம்.

தீராதபாண்டு காமாலைதீர செப்புமகா சிந்தாதிலேகியந்தான்.தோ
ஷாதபுளியிலைச்சாற் றாணியொன்று சுற்றிவருங் கடுக்காயு மாராரும்,
சாராதசிவிதைவேற் முள்ளிவேறுஞ்சாரணைவேற் உரிவேறுமுத்தக்காசு
மாராதமஞ்சளொடு சித்ரமூலம்பாதரிவேற்முன்னைவேற் வில்வவேரே.

வில்வக்காய் தாறுவளை கீழ்க்காய்நெல்லி வேறுடனேபெருவாகை
க்குமிழமவேறு, செல்லகத்தான் சிங்கம்வேற் வேப்பம்பட்டைசித்தமல்
லிநெரிஞ்சிநா யுருவிவேறும், சொல்லத்தானுசிமல் லிகையான்வேறுங்
கூடர்வட்டத் திருப்பிவேர்போமல்லி, மெலலத்தான்கிரிமுன்ளிக்கண்
டங்காலி வேறுடனே வகைக்குவகைப் பலந்தான்பத்தே. (உ௭௯)

---

பத்தான மருந்திடித்துச் சாற்றிம்போ டுசுவிநீர்ப்பதிஞறு படியும்
வாரு,சத்தானயிரும்புபல மூந்நூறிட்டு தனிக்கிட்டம் நூறுபலந்தகத்
தப்போடு, மூக்கான ஆற்றுநீ ராணிவாரு முடாவிலிட்டு அடுப்பேற்
றிதிலைமூட்டு, சித்கான கணபதியைப் பூசைபண்ணி நினமேழுசென்
றபின்புகுறுக்கிடாயே. (உ௮௰)

குறுக்கியே படியாறு வடித்துக்கொண்டு குநவேலி பேய்த்தும்
பைமூல் மஞ்சள் ..னு, குறுக்கியே பனங்கிருபு புளியுமினாத்தோடு
காட்டில்முள்ளி கிரதகண்டதுவுங்களு, சொறுக்கியே புரசுடனேபே
ழுஞ்சுட்டு நுவலவகைக்கொருபடியாமசாம்பல்வாங்கி, இறுக்கியேசாளி
வாயவேடுகட்டி யேழுபடி சாம்பலிட்டுத் தண்ணீர்வாரோ. (உ௮௧)

வாரப்பாபடிநாலு பெயறத்தோடுவார்த்துவிடுசாறுவகைக் குப்பை
மேனி, சாரப்பா நீர்மிமினொச்சிச்சங்குசாரணையுங்கல்லுருவி அவுரிச்சா
றும், கோப்பா சதுரக்கள்ளிச்சாறு வகையொன்றுகீனவாகப் படிகொ
ண்டுகூடவாரு, போமப்பா வார்த்தையின்பழத்தின்சாறும் பிசகாமல்ப
டிநாலுங்கூடவாரோ. (உ௮௨)

கூடவே பனைவெல்லம் பலமறுபதாகும் கோட்டியேபாகுவரும்
பருவத்தன்னில், காடவே பசுவின்னெய்ப்படிதானொன்று நல்லெண்ணெய்ப் படியொன்று பாகில்சேரு, கூடவே க
ற்றாழை பொடிதான்சேரோ ஒன்றுசுத்தி செய்துகரி சாலைச்சாற்றில், ஆ

டவேசாமமொன்று வறுப்புச்சாம மப்படியே மூன்றுதிர மடங்கச்
செய்யே. (௨௱௰௪)

செய்யடாபொடிபண்ணிவைத்துக்கொண்டு திரிகடுகுநாகமொடு
தேவதாரம், வைவடாஇலவங்கப்பட் டையேமெய்வாய் விளங்கமேலயில
வங்கப்பத்திரி, மெய்படாசுரியசீரகமிந்துப்பு மிச்சசீரகந்தேசா வரத்தி
னேடு, வையடாதிரிலையும்வகையொன்றுக்குப் பலமொன்றுபொடிப்
பண்ணிப்பாகில்துாவே. (௨௱௰௫)

தூவிமடிபற்றுரல்கிண்டிக்கிண்டித் தூலக்குரகமெழுகாளுமிறக்
கியாற்று, தாவிவிடுகேன்படிதானென்றுசேர்த்துச் சாதித்துப்பின்கானி
லடைத்துக்கொண்டு, ஆவலுடனரதிசகதிகான்றிக்காயி னளவுண்ண
த்திரும்கோபறையக்கேளு, காவியடிவீக்கநீர்க்கோவையோடு மாடாது
பெருவீக்கவிரணபாண்டே. (௨௱௰௬)

பாண்டுடனேவிஷபாகஞ்சோகைகுன்மம் பாழானபடிவீக்கம் க
டிவீக்கம்போம், வேண்டுடனேகாமாலையுப்பிசங்கள் மிகுபித்த வாத
மொடுசெய்பாண்டெல்லாம், மூண்டுடனேதீருமடா மோசமில்லை மூல
த்தின்ரத்தமொடு மூலப்பாண்டு, பூண்டுடனேதீருமிது பொய்யென்று
தே புளிகசப்புமாற்றிவிடும்புனிதமாமே. (௨௱௰௭)

## நெல்லிமுள்ளிலேகியம்.

புனிதமென்றநெல்லிமுள்ளிலேகியத்தைப் புகலுவேனெல்லிமு
ள்ளிபலமிருபதாகும், குனிதமென்றஆற்றுநீர்படியெண்ணான்கு குறு
க்கிபோலுபடிவடித்துக்கொண்டு, வனிதமென்றசர்க்கரையும பலமிரு
பத்தைந்து மாட்டியேபாகுவருமபருவந்தன்னில், கனிதமென்றஅதிம
மதுரங்கூகைநீறுங் காணுமூங்கிரிசைப்பழந்தான்கருதிடாயே.(௨௱௰௮)

கருதியேவகைக்குரண்டுபலமதாகக் கனத்தபேரித்தனேடு திப்பி
லியுங்கேளு, விருதிஞெடுவகையொன்று பலமூன்றப்பா மெல்லியதாய்
ப்பொடிபண்ணி பாகில்தூவு, பெருகிவிடுகேன்படிதானையுகூட்டி
ப் பேசாதேகிண்டியெடுபுன்னைக்காய்போல், அருந்திமிகீபதிசந்திதிரு
ம்நோய்கே ளப்பனே வாதபித்தமகலுங்காணே. (௨௱௰௯)

அகலுமேகாமாலைபித்தபாண்டு யுளர்ச்சியுடன்வைட்சி இமிர்வாங்
விசோகை, புகலுவேனிரச்சுருக்குப்பித்தகுன்மம்போகுமே யுடம்பெரி
வு போகுக்கண்டாக் இதலுமேபுளியோடுபுணையுந்தள்ளு மிகுபதா

ட்கொள்ளவெல்லாவிடருந்தீரும், சகலமேபுராணிதனக் குபசாரங்கள் தான்செய்தாலகாமன்னே திருத்தாமே. (௨௨௰)

## சற்பகவில்வாதிலேகியம்.

தானேகேள்சற்பக்கிவில்வாதியென்று சயபாண்டுகாமாலை காசந்தீர: மானேகேள்வில்வவேர்ப்பட்டைதள்ளி மையமுருஞ்சக்குமுக்காவேளையின்வேர் தேனேகேள்பலமறுபதெடுத்துக்கொண்டு சிற்றமுட்டிபலம்பத்துச்சித்திரமூலக், கானேவாள்முள்ளிவேர் முதியார்கூந்தல் கண்டகத்திரிவேருஞ்சேர்த்திற்றன்டே. (௨௨௧)

சேர்த்திவெள்ளைச்சாரணைப்பொன் முசட்டைவேருஞ் சிறுதேக்குதன்னரிவிலாமீச்சம்வேர், சேர்த்துதும்பிவகைவகைக்குப் பலந்தானைந்து சீர்காட்டுமல்லிகைவேர்பலந்தானரண்டு; பாந்தமுடனறுக்கியிடிபாண்டத்திட்டுப பாணிபடிமுப்பத்திரண்டுபரிவாய்விட்டு, காந்த அனல்விட்டெரித்துப்படியெட்டாக்கிக் கிழாயத்தைவடிகட்டித்தாளிற்சேரே.

தாளியின்சர்க்கரைப்பலந்தான்முப்பதிட்டுத் தனைக் குறுக்கிப்பாகாக்கிக்கற்கங்கேளு, மாளிகேளாய் பொடியிருப்புக் கிட்டம்ரண்டும் வகையிரண்டு பலமாகவாங்கிக்கொண்டு, கேளுமிதைச் சுத்திசெய்து காப்பான்சாம்றிற் கெடியாகவரைத்திடுவாய் சாமமொன்று, தாளிதனைச்சாற்றிலிட்டுக் கலக்கியோட்டில் சோதிசேர்மாகுமட்டும்வறுத்திடாயே. ()

வறுத்திடுதான்பொடிசெய்துவைத்துக்கொண்டு மைந்தனேதிரிகடுகு லவங்கப்பட்டை, கறுக்ககருஞ்சீரகமுஞ்சிறுநாகப்பூ கண்டதிப்பிலிபாத்தைசித்திரமூலம், சிறுக்கதொருகுராசாணிகொத்துமல்லி செவியுஞ்சீரகமோமங்கிராம்புகோஷ்டம், குறித்ததாளிசப்பத்திரியேலம்பெலம் குலக்கவியும்பத்திரியுங்குறையாதென்னே. (௨௨௩)

என்னவிந்தவகையொன்றுவிராகனெட்டு எடுத்துவடிகட்டிநீபாகில்தூவு, தன்னையடிபத்தாமல்கிண்டிநீயுந் தான்மெழுகுபதமானவிறக்கியாற்றிச், சின்னமில்லையவாப்படிதேன் விட்டுக் கிண்டித் தின்னவேயக்கிசந்திதீரும்நோய்கேள், மன்னவந்தசயபாண்டுவாதவாய்வு காமாலைசோகையொடு காசம்போமே. (௨௨௪)

போமப்பாபித்தமொடுவாந்திவிக்கல் பொல்லாதமேகமொடு சோகைசோகம்; நாமப்பாகபிக்கலுடன்வாந்திதாளும் நாசிகாபீட்மொடுசுரமா

ங்கைகூட்டு, தாமடாவியாதியெல்லாந்தவிர்க்கும்பாரு சங்கற்பம்புளியுடனேபுகையிலையுந்தள்ளு, ஓமடாவைத்தியந்தானில்லாவிட்டா லூற்றமிணிதீராது வுண்மைதானே. (௨௨௬)

### வசிக்குளியம்.

உண்மையாம்வசிப்பதுதான்பனிரண்டுக்கு மூத்தமனேகசியமொன்று வுரைக்கக்கேளு, வெண்மையென்றவெள்ளுள்ளி யிலுப்பைக்கட்டி மிருவசம்பு அவுரியிலைச் சாறுங்கூட்டி, வண்மையுடனேமூனாளுந்திசந்தி மைந்தனேகசியஞ்செய்வசிப்பெல்லாமயோம், தண்மையாமுருகைவேர் பாஞ்சிதானுந் தவிமுலைப்பால்சேர்த்துவிட்டால் சன்னிபோமே. (௨௨௭

### சண்டமாருதமை.

சன்னியொடுசிலேற்பனங்கள்ளுலைவாய்வு தீரணகிர சண்டமாருதமையைக்கேளு, பன்னுரசக்கர்ப்பூரமிலிங்கம்வீரம் பரிவானகெந்தியொடு தாளகமுஞ்சிலையு, முன்னதனைச்சுத்திசெய்துவைத்துக்கொண்டுமுழுகவிடு உன்னும்பால்ரவியில்வைத்து, குன்னியது வற்றவற்றமேற்பால்விட்டுக் கோடூவியேமூனாள்வைத்துவாங்கே. (௨௨௮

வாங்கியேவெட்டியின்மரத்தின்பாலை வலுவாகமேல்பூசி ரவியிற்போடு தேங்கியேமூன்றுதினஞ்சென்றபின்பு தீயிலேவாட்டியெடுகடிகைரண்டு, ஓங்கியேவில்வக்காய்நறுக்கியிட்டு உத்தமனே குழித்தயிலமாகவாங்கி, காங்கியேசுருக்கிடுவாய் நாலுசாமம் தப்பாமல்வகையொன்று கழஞ்சியொன்றே. (௨௨௯)

ஒன்றாகசிறுத்தப்பராகல்வத்திட்டு உத்தமனேநாலுமதுமுக்கழஞ்சு, குன்றாமல் திரிகடுகுவகையொன்றுக்குக் கூட்டுவாய்முக்கழஞ்சுகூட்டியாட்டு, சென்றுடஐவகோலந்தயிலம்விட்டுச்சேர்த்தரைக்கநால்சாமமெழுகாம்பாரு, நின்றுடத்தேன்விட்டுச் சாமமாட்டி கீகொம்புச் சிமிழ்தனி லடைத்துக்கொள்ளே. (௨௩௰)

கொள்ளடாமண்டலந்தான்வாதமொடுசன்னி கொடியசாஞ்சூலையொடு ஓடிப்போகும், அள்ளடாஅனாயாப்புக்கிரந்திகுஷ்ட மண்டலத்தில்பிளவைப்புத்துப் பவித்திரங்கள், மெள்ளடாமனுபானமறிந்துசெய்தால் விரட்டுமடாகுன்றியிடைவேகமெத்த, தள்ளடாதினந்தோறுமந்திசந்தி தான்தீர்ந்துரோயனைத்துந்திருந்தானே. (௨௩௧)

திருந்தான்புகையோடு புளியுந்தள்ளு தேகப்பலநோயறிந்தலைமையை யூட்டி, ஆருந்தான்பத்தியமேயிருக்காவிட்டா லவர்பிணிகள்தீராதுவதி க்துகொளளு கோருந்தான்குருவினிடபதத்தைநித்தல் குறித்துநீவணை ங்குவினைகுடிபோம்பாரு, சாருந்தான்கர்மத்தைத்தள்ளிநீயும் தர்மத்து க்குடம்பெடுத்துச்சாற்றலன்றே. (௨௱௨)

### சுரத்திற்குமிருத்துவாதிக்குளிகை.

காணென்றமிருத்துவாதிகுளிகைதன்னை லவிலக்கிகளரிதாரம் வி ராகனொன்று, மாணென்றகெந்தியொன்றுதுரிசுதுத்த மாணுக்காள்ளா பியொடு வகைமூன்றும்பாரு, ஆணென்றவிராகனிடை தூக்கிக்கொண் டு அப்பனே பாகினிம்சாறுவிட்டு, சேணென்றபயறளவு குளிகைசெய் து இறமாகநிழலுலர்த்திவைத்துக்கொள்ளே. (௨௱௩)

### மகாமிருத்துவாதிக்குளிகை.

கொள்ளவேயனுபானமறிந்துசெய்தால் குடிபோகுஞ் சக்லசுரக் குடிலமெல்லாம், விள்ளவேமகாமிருத்துவாதி தன்னை விளம்புறேன் வெள்ளாட்டுப் பிச்சினோடு, மெள்ளவேகருக்காபிவிராகனொடையாறுமே வுதிரிகடுகுடனேசாதிலிங்கம், அள்ளவேதிரிபலையுங்கடுகுரோகணியப் பனேவகையொன்று விராகனிடையாமே. (௨௱௪)

இடையாகநிறுத்துநீகல்வத்திட்டு எலுமிச்சம்பழச்சாற்று லிரண் டுசாமம், முடைதீரஅரைத்துமுட்க்கொற்றுன்வித்து முதல்மட்டுமு ண்டைநிழலுலர்த்திக்கொண்டு, நடையாகஅனுபானமறிந்துசெய்தால் சிக்கல்குளிர்சுரங்கள்முதல்தீரும்தீரும், விடையேறுமீசனன்றுமைக் குச்சொன்னார்மேதினியில்மனிதருக்காய்விண்டிட்டோமே. (௨௱௫)

### சீதசுராங்கிஷக்குளிகை.

விண்டிடவேசீதசுராங்கிஷத்தைமைந்தா வெள்ளைப்பாஷாண மி டைவிராகனாறு, உண்டிடவேசாதிலிங்கம் விராகனிடைநாலு ஊமத்தம் வேறதனைக்கியாழம்வைத்து, கண்டிடவேசாமமொன்றுமை போலாட் டிக் கருதிசிறுப்பயறளவுஉண்டைசெய்து; கொண்டிடவே பஞ்சகாலா தியோருண்டைகொடுத்திடவேசுரமனைத்தும்குடிபோம்பாரே. (௨௱௬

## அரிதாரக்குளிகை.

குடிரோகும்பத்தியங்கள் பசுவின்பாலுங் கொள்ளல்லஞ்சீனியி ட்டுக்குடிக்கச்சொல்லு, அடவாகசீதசுர மனைத்தும்போகுமறையுகிறே னரிதாரக்குளிகைதன்னை; திடமாகுமரிதார மிடையேயைந்து சோட துரிசிரண்டு சீலைதன்னில்; இடமாகுந்தோளாந் திரமாகக்கட்டி யிருகல சந்தனிற்சுன்னக் கல்லும்போடே. (௨௱௭)

போடுநீ அமுரிவிட்டு நீற்றியாற்றிப் புகழாகமூன் றுதிரம் கழுவிக் காய்ந்தால்; தேடுநீகற்சுன்ன மிடைதானலு திறமானநாபியிடை யொ ன்றுபோடு, நாடுநீ கற்றாழஞ்சோற்றையிட்டு நாழிகைதான் மூன்றரை த்துவுளுந்துபோல; வாடுநீ வுருட்டிநிழ லுலர்த்திக்கொண்டுவட்டோடு தன்னிவிட்டு மேலுமூடே. (௨௱௮)

மேலோடு யிருசீலை மண்ணுஞ்செய்து மேலுலர்த்திக் குக்கிடமா ய்ப்புடமிட்டாறி; சேலோடுகல்வத்தி லிட்டுநாசிசேரப்பாவிராகனிடை யிஞ்சிச்சாற்றில்; மாலோடு தானரைப்பாய் கடிகைரண்டு மாபச்சைப்ப யறளவு உண்டைசெய்து; நாலோடு நிழலுலர்த்திவைத்துக்கொண்டுந லமானசீரகத்தை வறுத்திடாயே. (௨௱௯)

வறுத்துடனே பொடிப்பண்ணி குளிகையாறுவைத்துநீதேன்வி ட்டுஅரைத்துக்கொண்டு, திறத்துடனேமூன்றுநா ளாறுநேரஞ்செலுத் தினல்சீதசுர மனைத்தும்போகு;மறித்திடுமே விடாதசுர மாறலெல்லா மைந்தனே விஷசுரமோ மாறுங்கண்டாய்,வெறுத்துடனே பத்தியந்தா ன்பசுவின் பாலாம் வென்னீருந் துவரையுடப்வருப்புமாமே. (௨௱௰)

பருப்பாகும் வறுந்தவுப்புச் சற்றேகூட்டு பாங்கான அரைக்கீரை முருங்கைப் பிஞ்சாம், விருப்பாகும் வழுதலைப்பிஞ் சவரைப் பிஞ்சாம் வெறுத்திடுவாய் புளிபுகையு மாங்கிஷங்கள்; நெருப்பாகும் பூண்டுள்ளி கடுருமாகா நீராட்டிப்பத்தியத்தை நிறுத்துப்போடு, இருப்பாகும்பத்தி யந்தா னில்லாவிட்டால் தீராதுசொல்லிவிட்டேன் திறந்தான்காணே

## குளிர்சுரத்திற்குஅரிதாரக்குளிகை.

திறமானகுளிர்சுரங்க ளனைத்துந்தீரச் செப்புகிறேனரிதாரக் குளி கையொன்று, அறமான அரிதேவி சுத்திபண்ணி அப்பனேசழஞ்சிரண் டுகல்வத்திட்டு, திறமானகற்சுன்னங் கழஞ்சிநாலு நிறுத்திடுவாய்க்கனை கமென்ற மிளகுநாலு; உறமானகோழிமுட்டை வெண்கருவிலாட்டிஉ த்தமனே தானங்கா யுண்டைசெய்யே. (௨௱௰௨)

உண்டைபண்ணி நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு யுத்தமனேய
னுபான மதின்னுசெய்தால்; கொண்டதொரு சுரமனைத்துங் குடிபோம
யாருகூட்டாதே புகைபுளிமோர் நெய்யுந்தள்ளு, கண்டபலத் தினிதனை
க்காசைவாளுல் எடுக்கவேதோஷமொடு சன்னியுண்டாம், அண்டரொடு
முனிவர்பணி யாளுர்முன்னு ளம்பிகைவாள் தனக்கருளுமருளுமாமே.

சகலசுரத்திற்குமாத்திரை.

அருளுவோஞ் சகலசுரந் திரவென்று லரிகாரவெள்ளைமாத் திரை
தானென்பா, வெருளவே யரிதாரம் விராகனெட்டு மேலான துரிசிரண்
டோபியொன்று, மிளகுகற்சுண்ணம் விராகனிடைநாலு பேருகற
றுழுஞ்சாற்றுலாட்டி, மருளவே துவளைப்போ லுண்டைசெய்துனைந்
தனைநிழலுலர்த்தி வகைவைக்கேனே. (௨௪௪)

வகைகேளு மோட்டிவிட்டு வோடுமுடி மண்செய்துகாடைபென்
றபுடத்தைப்போடு, துகைசேளு ஆறவிட் டெடுத்துக்கொண்டுசுகமாக
ச்சிரகமவிராகனிடை மூன்று; பகைகேளு வறுத்துநீ பொடிதான் செய்
துபாய்ச்சுவாய் திரலாறு குளிகைதனை, முகமாறத்தேன்விட்டு மை
போலாட்டி மூன்றுநாளதிசந்தியேய்க்கிடாயே. (௨௪௫)

காசிகாமரணம்.

எய்த்திடவே வாதபித்தத்காலேவங்க யிடங்கெட்டமாறலென்ற சு
ரங்களெல்லாம்; மாய்ந்திடவே வங்கசுரமெல்லாந்தீரு மாறலுக்குநாசிகா
பாணங்கேளு; காய்ந்திடவே காவியொடுதுரிசி நேராய்க்கல்வத்திலிட்டுபொ
டிசெய்து வைத்துக்கொண்டு, சாய்ந்திடவே பணவிடைதான் மூக்கி
லூது சகலசுரமாறலெல்லாந் தரியாதென்னே. (௨௪௬)

தரியாதுநாலுநாள் மாறலோடு தான்மூன்றுமாறலெல்லாஞ் சமு
த்திரமேபுக்கும்;பிரியாதசன்னிவிஷ சுரத்துக்கப்பா பேரானவேளை வே
ர்சுரசம்வாங்கி, சரியாகபிஞ்சிபதின் சுரசஞ்சேர்த்து தாளுன திரிகடு
ப்பொடியுங்கூட்டி, உரியாகததேன்கழுஞ்சி விட்டுப்பாய்கநாலே டுமே
சன்னிவிஷச் சுரமும்பாரே. (௨௪௭)

திருநேத்திரமை.

சுரத்தின்மேல் வருவாதத் தோஷத்தோடு சுரநோஷந்திரிதோஷம்
பரமதோஷம உருத்துவருந் தோஷமெல்லாமொழிவதற்கு யுனாக்கிநே
ண் திருநேத்ர மைதானப்பா, விரித்தசடையான்விந்து விராகனிடை யண்
டுவெடிதேங்காயோடு சுட்டகரிதான்ரண்டு, கருத்தகடல் வித்துதனைச்
சுத்திசெய்து கணக்கயிடு விராகனென்றுகல்வத்தாட்டே. (௨௪௮)

ஆட்டையிலே மனைவெல்லம் விராகனிடைரண்டு அப்பனேதேங் காய்ப்பால் விட்டு ஆட்டி, குட்டியல்லோ மையெடுத்துச் சிமிளில்வைத் துசுகமாகப்பணவிடைதான் நாக்கில்தேய்த்து, காட்டையிலேவென்னீ ர்சற்றீய்ந்தாப்பாகில் நலமாகத்தீருமநோய் நவிலக்கேளு, ஓட்டுமேசுர தோஷம் விக்சல்வாந்தி ஓடுமேமேல்மூச்சு விக்கல்போமே. (௨௪௬)

வோமடாமதிமயக்கம் விஷங்கள்பித்தம் பொல்லாத ஜிரிதோஷம் விருமதோஷம்; நாமடாசிலேட்டுமமுஞ்சருவதோஷம் கஞ்சுதின்றதோ ஷமுடனுதிரதோஷம், ஆமடாகஞ்சுவிஷ மென்றவெல்லாமகலுமேசுக சன்னி தோஷத்தோடு, ஓமடாமலக்கட்டும் தீருந்தீரு முமைக்காளு ரு ரைத்தபடி யுண்மைதானே. (௨௪௭)

மகாசுராங்கிஷக்குளிகை.

உண்மைமகாசுராங்கிஷத்தின் குளிகைகேளு உமைவிந்துரசம்நா பிவெள்ளை தானும், வண்மையென்றவெசான் னுமத்தைவித்திரேடுவகை க்குாண்டு காசிடைதான்கல்வத்திட்டு; தண்மையதாயிளகளவுங்.ச்பூஞ்சி ப்பத்துதான்சேர்த்துயூமத்தன் சாற்றாலாட்டி, வெண்மையதாகுண்றியி டைக்குளிகைகட்டி மங்கநிழலுலர்த்திவைத்துவிளங்கக்கேளே (௨௪௮)

கேள்சன்னிவாதமொடுசேசுரம்வந்தால் செடியாணையிஞ்சிரசுத்தன் னிலூட்டு, நாள்பித்தசுரம்விஷமாஞ் சுரத்துக்கெல்லாந் சமபழத்தின் சாற்றிலிட சந்தசுரந்தீரும், வான்வென்னராள்னமுங்கொள் மற்றொன் றுநா மைக்கனேவறுத்துப்புச் சற்றேகூட்டு, குள்கின்ற சுரமனைத்துந் தீரவென்றால் சுராங்கிஷந்தா னிணையொன்று சொல்லக்கேளே; ()

மேற்படி சுரத்துக்கெல்லாம்.

சொல்லுவேன் ரசம்பச்சைநாபியோடு துடர்கெந்தியரிதாரம் லிங் கம்வாளம்; வெல்லுவேன்வெண்காரந் திருகடிகிஞ்டுவிளங்குதிருபல லைக்குக்கழஞ்சி யொன்று, சொல்லவே கருப்பமன்சாற் விட்டுஆட்டி சிறுபயற்றி னளவுநட்டி நிழலுலர்த்தி; அல்லவே சிமிளில்வைத்துசு ரத்துக்கெல்லா மனுபானஞ்சொல்லுகிறே னறிந்துகொள்ளே. (௨௫௰)

அறிந்துசுர தோந்தங்களெல்லாங்கண்டு அதிசீத சன்னிசுரமளவு ம்பார்த்து. மறிந்தவொரு மூலைப்பாலிஞ்சிச்சாற்றில் மூலிகையாலவி ட்டுகளில் துளசிச்சாற்றில். செறிந்தவொரு திரிமலையின் கியாழந்தன்னி

ல்சீரகத்தில்திரிகடுகு வியாழமாதல்.நிறைந்தகொரு நகைசமூலம்பஞ்சை மூலம் கோதிந்து குளிகையிட நில்லாதன்றே. (௨௫௪)

## இக்குளாதிக்குளிகை.

நில்லாது வெந்நீரு மன்னக்கொள்ள நிலைகெட்ட்சுரமனைத்தும்நீங்கும்பாரு, வல்லாது சுரத்துக்கு இக்குளாதி மாத்திரையோ சொல்லுகிறேன் மகிழ்ந்துகேளு, சொல்லாத லோகபற்பம் கற்பூரபற்பமதே யெவிந்து சிவன்விந்து கடுகுரோகணி, பொல்லாதபேய்ச்சுரையின்வேர் மின்வாளம் பொன்னூமத்தைவேருடனே சிவிதைவேறே. (௨௫௫)

வேறப்பா வெள்ளைக்கா லிளையின்வேரும் மேலானதிரிகடுகு பச்சைகாபி, ஆரப்பா மால்தேவி வெள்ளைதாலு மரிதகியும் வகையொன்று கழஞ்சிரண்டு; பாறப்பா கல்வத்திலிட்டுஆட்டப்பாங்கான நாகவல்லிசாற்றிலேழ்நாள், சேறப்பாமிளகுதாள் கழஞ்செண்ணுன்கு சேர்த்துமின வெந்நீரா லரைத்துக்கட்டே. (௨௫௬)

கட்டுவாய் மிளகளவு யுண்டைகட்டிக் கனமாகநிலலுர்ழத்தி மினம்வெந்நீரில், அட்டியில்லா தொருகுளிகையீய்ந்தாயாகுலறுபத்துநாலுசுர மகன்றேயேகும், விட்டிடுமே யொருதிரந்தான்பேதியானல்வெந்நீரு மன்னமுந்தான் கொள்ளச்சொல்லு, கட்டிவிடும் பகலுறக்கம் வேண்டாஞ் சொன்னேன்சாபமிட்டுச்செய்யப்பாசாற்றுறேன்ணுதே.

ஒண்ணான திரிதோஷ சுரத்திேனாடு ஒடுக்காதவிஷச்சுரங்க ளேழுந்தீரும், பெண்ணார்கள் சுகசன்னி சன்னிதோஷம் பெருஞ்சன்னிவாத சுரம்பிரலாபங்கள், எண்ணாத சுரமனைத்து மில்லைவில்லை எளிதல்லசெய்துபாரிடுக்கதீருங்-கண்ணாலே திரிபுரத்தை யெரித்தயீசன்கருத்தறிந்துதேவிசொல்லக் கண்டிட்டேனே. (௨௫௮)

## மகாயின்குளாதிக்குளிகை.

கண்டபடி யிக்குளாதிக் குளிகையொன்று காணுகிஜாதிலிங்கம்பச்சைநாபி, விண்டபடியிந்துப்பு குதன்கெந்தி வெண்காரந்திரிகடுகு கடுக்காய்கூட்டி, கொண்டபடி சிவலிங்கவெட்டிவிரையினேடு கொடிவேலிவேற்பட்டைத் தூளுங்கூட்டு; உண்டபடி யிவையெல்லாம் சமனதாக உத்தமனே சதுரகள்ளிப் பால்விட்டாட்டே. (௨௫௯)

ஆட்டியே மிளகுபோ லுண்டை செய்து அப்பனே நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு கூட்டியே யொருகுளிகை மிளகுவெந்நீ

தில் கொடுத்திடவேசுரங்களறுபத்துநாலும், கேட்டியோ யாம்பலென்றதுலைதீரும் கேடுகெட்டசுரஞ்சூலைகடிவிட்டோடும், நாட்டிலேயன்னமொடுவெந்நீருந்தான் நல்கிடுவாய்மற்றொன்றுங்கவிலொண்ணாதே.(

## கெடிகூரணக்குளிகை.

கவிலவேகெடிகூரணக்குளிகையொன்று ரசங்கெந்திகருமாபிசெயட்டிக்கொட்டை, கவிலவேயிருவிபக்கிராகாரங்கூட்டிக் கனக்கஞ்சதாமணாகழுஞ்சுவீதம், நுவலுமேவாடவெள்ளாட்டுப் பிசசிலேல்லார்காள் றெறுக்கிவிட்டுவேறவைத்துக் கல்வத்திட்டு, குழிமூலைபாமிளகள்வுங்கண்ணீர்விட்டுக் குமாவேசாமமரைத்துருட்டிக்கொள்ளே. (உசுக)

உருட்டுவதுவெந்தயம்போலுருட்டிக்கொண்டு உலர்ந்தபிரகன்தண்ணீலூட்டினுக்கால், வெருட்டுமுடல்வேர்வைமிகும்போர்வைபோர்த்திவெருளாதேவேர்வைதான் மெத்தக்காணும், மருட்டுசுரமிரண்டுநாழிகைமில்திரு மக்களேபத்தியந்தான்மோருஞ்சோறும், புரட்டுவமிற்றுலேவுகண்டால்அவிணிருள்ளி பேசாதேயனைில்வைத்துப்பெருகிவீமே.

## நாளேயென்பான் நாயகன்குளிகை.

பெருகவருஞ்சுரமெல்லாந்திரவேண்டிப் பேசுகிறேன் நாளேயென்பான் நாயகத்தை, உருகிவரும்வெள்ளைப்பாஷாணமைந்து உற்றகொத்துமல்லியிடசுரசதகிட்டுச், சருகிவருமூன்றுநாள்சல்வத்திட்டுத் தானருக்கன்கரிக லுதன்னிற்றுக்கு பருகவரும்பச்சரிசி தவிடுநாலு பாய்ச்சிசேயகொத்துமல்லிக்கியாழத்தாட்டே. (உசுங)

ஆட்டுவாயொருசாமம்பயறுபோல அப்பனேயுருட்டிநிழலுலர்த்திக்கொண்டு, சூட்டியேயொருகுளிகைகாகவல்லி சுரசத்திலிடச்சகலசுரமுந்திருப்; வாட்டியேயன்னமொடுவெந்நீராரு மற்றொன்று மாகாதுமைந்தாபாரு, நாட்டிவேனின்னமொரு கிசிச்சைசையா காமனென்பான்நாயகத்தைதகவிலொண்ணாதே. (உசுச)

## இதுவுமது.

ஒன்னுகைத்தையதுபெரிதாய்ப்பார்த்து யுத்தமனே யெடுத்துவங்துமாலின்தேவி, நன்னுதவிராகனேர்த்துகிறுக்கெடுத்து கல்வாயைந்தித்துத்தார்க்குள்நறுக்கியிட்டு, மண்ணுல்காற்சீலைசெய்து குப்பைமேட்டிக்லரும்பகவின்இடையாண்டி லொன்றிலாதல், என்னுது குழிகெல்லிவைத்துமூடி யென்மக்காள்மண்டலஞ்சென்றெடுத்திடாயே. (உசுரு)

எடுத்திடுசீமாங்கிஷ்டிரும்காரம்ரண்டு எளிகல்லப்பாகை யிலேச்சாற்றாலாட்டி, கடுத்திடுச்சாமமொன்றுசிறுபாறுபோலே கட்டியுண்டையிடிலுலர்த்திவைத்துக்கொண்டு, கொடுத்திடுசிமிளகைந்து குளிகையொன்று கொடுத்தும்மெள்ளவிழுவகச்சொல்லாறு நேரம், நிறுத்திடுமே சாமென்றதனைத்துமோட நாயகத்தின்பிலமறிக்துமன்சொன்னேனே ()

சொன்னேனின்புழுங்கரிசி கஞ்சிகூட்டு தொடாதேபுளிபுலையுழுப்புமாகா, நின்றுமேனையிட்டுகொள்ளட்டுஞ்சொன்னேன் விடாகலுமொன்பதாங்களில்முழுக்கு, மூன்றுமேபதிதியங்கள்பிசகாவண்ணமூன்சொல்லிப்பின்புநீமருந்தையூட்டு, மன்னுகேள்பித்தங்களசுரங்கள்தீர வகுத்திடுவேனேலாதிக்குளிகைதானே. (௨௬௭)

## ஏலாதிக் குளிகை.

தானென்றயேலமதிமதுரஞ்சுக்குச் சாதிக்காய்பொன்மெழுகு லைவங்கப்பட்டை, கானென்றசந்தனமுங்தேவதாரம் நன்னாரிவேருடனே மூத்தக்காசு, கோனென்றகோரோசனையுங்கடுகு ரோகணியுங் கோஷ்டமொடுஇலுப்பைப்பூ விலாமிச்சம்வேர், ஊனென்றமுந்திரிகைபேரீந்தோடு உயர்ந்தசடாமாஞ்சிதிப்பிலியுமாமே. (௨௬௮)

ஆமடாபச்சிலையும்வகையொன்றுக்கு அப்பனேகழஞ்சொன்றுகல்வத்திட்டு, தாமடாகருப்பஞ்சாறினாலீர்விட்டுத் தானரைத்துச்சுண்டக்காயளவதாக, ஊமடாயுருட்டிநிழலுலர்த்திக்கொண்டு உத்தமனேயினக்கீனாலேகலைவத்து, போமடாஅந்திசீனியிட்டுப்பொசிக்கவே குளிகையொன்று போகும்நோயே. (௨௬௯)

நோயேதுபித்தசுரம்பித்தமெல்லாம் நுவலவேசத்திவிக்கல்நொடிக்குட்டிரும், நீயேதுபத்தியந்தானையுப்பிட்டு நேர்துவரைப்பருப்புடனேயன்னங்கொள்ளு, தாயேதுபசுவின்பால்சீனியிட்டுத் தான்கொள்ளச்சூடெல்லாந்தணியும்பாரு, பேயேதுபாபித்தியமேகொண்டபோர்க்குப் பெருங்கழுதைப்பாலிலிடு பித்தம்போமே. (௨௭௰)

## சுரத்திற்கு அஞ்சனம்.

பித்துவின்றசுரத்திற்கஞ்சனமேகேளு பேயாசிங்கிற்பூ கழஞ்சிரண்டு, இத்துடனேப்பழச்சாற்விட்டரைத்துமீயும் இரும்புமண் வெடிப்

பூமுந்தன்னிற்பூசி, மத்தட்டேனநல்லெண்ணெய்விளக்கு ஏற்றி மண்
வெட்டிப்புரத்தி லக்கணைக்கைமேயேற்றி, வித்துடனே மூன்றுடவு மருந்து
மையும வெண்கலத்தால்கிழ்க்குண வைபலுவக்கனே. (௨௭௧)

மேவிட்டுந்தாம்பூரத்தின் செம்பினாலே விளங்கவேநல்லெண்ணெ
ய்குத்திவிட்டு, மாவிட்டசாமக்காரனை யின்பு மாட்டு செம்புசிமினில்மை
வாங்கிவைத்து, காவிட்டநாள்மூனறுரண்டாமாதல் கண்குளிருஞ்சா
ங்களுக்குக்கண்ணிற்றீட்டு, வேவிட்டவிழிமாத்த பண்விடை மையப்
பா விளைக்கொடும்பலசுரங்களெலாந்தானே. (௨௭௨)

வாதத்திற்குப்பிட்டு.

தாவென்றவாதத்தின்கடுப்புக்கெல்லாஞ்சாற்றுகிறேன் பிட்டொ
ன்று தன்னைக்கேளு, பாவென்றமஞ்சணத்திமேலதானப்பா பலமிரு
இட்டுப்பாண்டத்திட்டு, வேவென்றவெள்ளமதுபதக்குவிட்டு வேடுக
ட்டியடுப்பேற்றிபுனலேமூட்டு, காவென்றகருங்குருவைப்பச்சைமாவா
ய்க்காலபடிமூன்னீதெளித்துப்பிசறிவையே. (௨௭௩)

வைத்துமேல்மூடிச்சமைத்துவாங்கி மைந்தனேயதையறிந்த வ
கையைச்சொல்வேன், எத்துமேபனைவெல்லஞ்சற்றேபிட்டு எட்டுநாள
ருந்தவேவல்லாவாதந்தீரும், நைத்தமேநோயறிந்துண்ணச்சொல்லு சார்பு
டன்புளிபுகையுந்தள்ளச்சொல்லு நித்தமேயுதையத்திற்பிட்டுதின்று தி
னவாகப்பத்துநாள் முழுகச்சொல்லே. (௨௭௪)

மகாநவலாலச் சூரணம் அழ-வாதத்திற்கும்.

சொல்லுவேநவலாலச்சூரணந்தானப்பா அடியானவாதமெல்லா
ந் தொலைந்துபோகும், கொல்லுமேகொடிவேலிபுங்கன்வேரும் கோ
டா ஆவிலிப்பம்வேருங்கூட, நில்லுமேயதின்வேரு பட்டைவாங்கி நிழ
லுலர்த்தியொருபலமாய் நிறுத்துவாங்கி, வெல்லுமே விடித்துச்சூரண
மேசெய்து மேல்மருந்துவாய்விளங்கக் கடுக்காய்சுக்கே. (௨௭௫)

சுக்குதிப்பிலிகடுகுரோகிணிசீரஞ் சுகமாகவகைக்கு அரைப்பலமே கூ
ட்டு, மிக்கவேதுய்யபொடிசெய்துகொண்டு மேற்பொடியுமுன்பொடி
யுங்கலந்துபின்பு, தக்கவொருகடியதுநான் தேனிற்கொள்ள, தணியாத
வாயுவொடுவாதந்தீரும், நீக்குமொருமண்டலத்திற்பச்சைவாதம் தீர்ச்ச
ன்னிவாதமுதல் நில்லாதுகாணே. (௨௭௬)

## மகாகனதூருவச் சூரணம்.

காணடா சூலைப்பினெட்டுந்தீரக் கனதூருவச்சூரணத்தைக்கருதிக் கேளு, வாணடா கருங்குருவைச்சம்பாவான வரிசியதுபலமிரண்டு வூற ப்போட்டு, வூணடா கழற்சிகொச்சிமுருங்கைமூன்று முயர்கொழுந்து பலமுக்கால்வகைக்குமப்போடு, காணடா நன்னாரிசிறுகீரையிட்டு ரசங்க ழஞ்சியொன்றனையுங்கூட்டத்தாக்கே. (உ௭௭)

கூட்டவேசிவன்வேம்புசூரணமேசெய்துகூட்டுகழஞ் சொன்றதை வெற்றிலைநாளைந்து நீட்டவேயுரலிலிட்டுஇடிமைபோலே நீமெடுத்துப் பொடியாக்கிவைத்துக்கொண்டு, ஆட்டவேவெருகடி யழாக்கு வெந்நீரி ற்கொடுக்கவுழுவ்பொழுதப்பாகேளு நாட்டவேயாறுநாளந்திசந்தி நாளொ ட்டுக்குளிர்ந்தசலத் திருக்கச்சொல்லே. (உ௭௮)

இருக்கவேயேரண்டத்தெண்ணெய்தேய்த்து இதமாகவொன்றை விட்டொருநாள்மூழ்கு; செருக்கவேயிருபதுநாட் கழிந்தபின்பு சேருகீ கோழியிடவிறைச்சிகூட்டு, உருக்கவேபுளியுப்புகசப்புதள்ளு உத்தம னேமுருங்கைக்காயிலையுமாகும், நெருக்கவேகத்திரியுமவரைப்பிஞ்சு ம் கூட்டச்சொல்லுவாய்மாதமொன்றே. (உ௭௯)

## கருங்குருவையரிசிச்சூரணம்.

மாதமொன்றில்நல்லெண்ணெய் முழுகலாகுமகத்தான சூலையொ டுகிராந்திதீரும், பேதமன்றியின்னமொருசூரணந்தான் பேசுகிறேன் க ருங்குருவைபச்சையாக; வேதமொன்றுபடியரிசிகால்தானப்பா வெற்றி லையின்சாற்றிலிட்டூறவுமட்டும், சீதமென்றமறுநாளிற்சாறிறுத்து நிழ லுலர்த்திமேல்மருந்து நிகழ்த்துவோமே. (உ௮௰)

ஓமென்றநல்லமின்னிமுசுமுசுக்கை யோரொன்றுவொருபிடிவெ ற்றிலைதானெட்டு; நாமென்றநிழலிலிட்டுச்செருக்க நன்றாகச்சூதமுக்க ழஞ்சுதூக்கி, தாமென்றவெற்றிலைச்சாற்றன்னைவிட்டுத் தான்மூறித்து எல்லாமொன்றாகச்சேர்த்து. ஆமென்று இடித்துமைபோல் தூளதாக்கி யப்பனேநிழலுலர்த்திக்கலசத்தாக்கே. (உ௮௧

கலசமதுபுகிதாகு மதிலேயிட்டுகெழும்கிக்காய்ப்பிரமாணம்நாளொன்றுக்கு, நிலேபசுவின்தயிர்தன்னில் குழைத்துநன்றாய்நீயுருட்டிக்கொடு பத்தியங் தயிருஞ்சோறும், நலமாகவிருபத்தோர்தினமூன்றாலும நல்காதேபுளிபு கையுந் தூரத்தள்ளு, பிலமாகவுதிமது வதிகங்கண்டால்பிரியமுடன் தயிர்வெல்லஞ் சேர்க்கப்போமே. (௨௮௨)

தூரப்போம் யோண்டத் தெண்ணெய்சேர்த்து சுகமாகுங் குளிர்ந்தசலந்தன்னில் மூழ்கு பாரிப்போம் பத்திமுழு கப்பாசொன்னேன்பறக்குமடா சூலேபதினெட்டும்புண்கள், சுரிப்போம் கிரந்திபதினெட்டும் நீருந் தணியாகவாய்வெல்லாந்தான் கெட்டோடும், பூரிப்போ முடம்புரிக்கிப் பிலக்குஞ் சொன்னேன் பேசாதே லுத்தர்களை யின்னங்கேளே. (௨௮௩)

ஞானம்.

கேளடா காமத்தால் கெட்டோர்கோடிகிளர்கின்ற கோபத்தால்மாண்டோர்கோடி., நாளடா ஆணுவத்தாலழிந்தோர்கோடி நல மாணதினிபிணிமாய்ந்தோர்கோடி, வேளடா தோஷத்தால் வீழ்ந்தோர்கோடி வீணாகக்கொலைசெய்து செத்தோர்கோடிமாளடாநானென்றதெல்லாந்தள்ளிப் பரஞான தத்துவத்தைப் பரிந்துபாரே. (௨௮௪)

பரிந்துபாருனக்குள்ளே பிர்மக்கியானம் பார்த்தாக்கால் தோணுதுபடுகுழியில்வீழ்வாய், திரிந்துபார்தாபரங்கள் செடிபூண்டெல்லாஞ்சீவசெந்துவூர்வனங்கள்நடப்பினங்கள், விரிந்துபார் பரப்பினங்கள்கவிழ்வினங்கள் வெறும்பாழென் றெண்ணாதே சிவமென்றெண்ணு சரிந்துபார்சிதானந்தா லறியலாம்பார் சகலசராசரமெல்லாந்தானாய்ப்பாரே.

தானான அண்டசரா சரமுந்தானே தாய்பெண்டீர்மக்கள்சுத்தந்தங்களைதானே, ஊனான உடலெல்லாந் தனதென் றெண்ணு உயிரெல்லாந்தன்னுயிர்போலெண்ணிக்கொள்ளு. மானான விழிமடவார் போகத்தாலேவருகின்ற நோயப்பா மயங்கவேண்டாம், தேனான மொழிமாதர்க்கிச்சைகொண்டால் தேகத்தில்நோய்களெல்லாஞ்சேருந்தானே. (௨௮௫)

திருநேத்திரச்சூரணம்.

சேருகின்ற சூலேபலவிரணந்தீர திருநேத்திரசூரணத்தைசெப்பக்கேளு, சேருகின்ற வெள்ளருகு சிவனார்வேம்புநெரிசங்குமூன்றுக்குமா
ள

திவாரம்,சாருகின்ற ரவியுதைய மாகும்போது தானமூலியாகன்னிகைநூ ல்காப்புக்கட்டி. உருகின்ற-அங்-ரங்-இங்-ரங்-உங்-எங்-ரங்-ஓங்-ரங்- லெ ன்றே. (௨௮௭)

என்றுநீ ஓஉசிவயநம-வென்றுதானே யிப்படியேசர்வசாப-நசி-நசியென் றுவுன்றுதனில் நூற்றெட்டுத் தாமேசொல்லி மத்தியானந்தனிலேவற்பி டுங்கிக்கொண்டு, சென்று சங்கலி வடவேரைப்பிரித்துவாங்கிதெளிவா கநிழலுலர்த்திச்சூரணமேசெய்துசன்றுகேஸ்லுரலிலிடித்துத்துளாயக ன்றுகவடிகட்டி யெடுத்திடாயே. (௨௮௮)

எடுத்திடுவாய் மும்மருந்து சமனதாகவன்மக்காள் புதுசலசந்தன் னிலிட்டு, கொடுத்திடுவா யிரவிநாளுதிக்கு முன்னே கோள்விலையுமது மூர்த்தமெனும் யோகந்தன்னில், தொடுத்திடுவாய்த் தங்கள்தங்களுநெசிக் கீசுரிதுதிலேமுன் பின்னுய் தன்னைச்சொல்லி, அடுத்திடுவாய் நடுநீர்சூடா றமுன்னே அப்பனே வெருகடிசூரணத்தையிட்டே. (௨௮௯)

சூரணத்தை யிருபதுநாட் கொள்ளும்போது சொல்லுவேன்பத்தி யந்தான் பசுவின்பாலாம்,பூரணித்த யுப்புடனேபலிசாமபாரம் போடா தேவெங்காயங் காயமாற்றித தோரணித்த கோழிமுனைச்சமைக்கக்கூட் டுத்துவரையுட பருப்புடனே முருங்கக்காயும், காரணத்தேவெள்ளாட் டிப்பாலுமாகுங் காற்றுவெயிலாகாது கருதிக்கொள்ளே. (௨௯௦)

கருதிலொரு முளகுமொருகுமுளத்திநூருங் கண்டதண்ணீராகா துசருத்கொண்ணுது விருதுகமந் திருமரோய விளம்பக்சேளு வெடிகு லைநீர்ச்சூலைவாதச்சூலை, பருதியெனவெறிசூலைத்தண்டிற்சூலைபாருபன ச்சூலையொடுகட்டுஞ்சூலை, குருதியெனுஞ்சூலை யண்டச்சூலையோடு கு திகாட்டிற்சூலையொடு சூலைப்புண்ணே. (௨௯௧)

புண்ணென்ற வரச்சூலை யுதிரச்சூலை புத்தருஞ்சூலையொடுகபால ச்சூலை தண்ணென்ற அடிநாக்கிர்சூலையோடு தணியாதவாதபித்தக் கர ட்டுச்சூலை,விண்ணென்ற ஐயதிற் சூலையுடற்கடுப்பும் விதங்களென் றசூலைமுப்பத் தாறுகதிரும், எண்ணென்ற நாக்கரிக்கும கிரந்தியரிகிரந் தியேழுமணிக் கிரந்திமருன் கிரந்திப்போமே. (௨௯௨)

ரோமப்பா நாசிதின்னுங் கிரந்தி யளிகிரந்திப் புண்ணுகும் வாய்கி ரந்திகண்டமாலை, காமப்பா கருங்கிரந்தியோனிப்புத்து கண்டரிக்கும் கிரந்தியொடு கெர்ப்பத்தின் கிரந்திதானும், ஷேமப்பாயோனிப்புண்கள்

ப்பூக்கிரந்தி மேஸ்வாயில் கிரந்திகண்டக்கிரந்தியோடும், ஆமப்பாகருவ
ழிக்குங்கிரந்தி லிங்கப்புத்து அத்திக்காய் கிரந்திசெங்கிரந்திப்போமே. ( )

கிரந்தியொடு விப்புருதி கட்டிப்புண்ணுங்கேளப்பாகபாலத்திற்கி
ரந்திமற்றும், பறந்துவரும்பிளவையொடு குழிவாலழுப்புண் பருபருவ
யெழுகின்ற பறவைக்கட்டும், எறிந்துவரு மொட்டியப்புண் ணென்ப
தெல்லாம் ஏகுமே எளிதென்றுயெண்ணாதே, தறிந்துவிடுங்குட்டமெ
ல்லாம்வருஷங்கொள்ளக் கைலாச ருரைத்தபடி கண்டிட்டேனே. ()

## இரசனிச்சூரணம்.

கண்டிட்ட ரசனிச் சூரணத்தைக்கேளு காணுரசகத்திசெய்துய
லமுக்கால்தான், விண்டிட்ட கெந்தியொரு பலந்தானப்பா மேலான அ
ரிதாரம் பலங்கான்ரண்டு, பண்டிட்ட நற்பரங்கிப் பட்டைபலநாலு பார
டாகொடுஙீவலிவேறின்பட்டை, நூன்றிட்டு யொன்றனாதான் பலமே
போடு சொல்லாதே யெட்டினைப் பலந்தானென்றே. (௨௬௫)

பலத்தாலே நிறுத்துக்கல்லுரலிலிட்டுப் பகருஞ் செங்கொட்டைப்
யைந்துவருத்துப்போடு, பிலத்தாலே யிடித்துச்சூரணமேசெய்து டே
ணியே யந்திசந்தியிளம்வென்னீரில், நலத்தாலே யொரு பொழுதுக்க
ளாக்கழஞ்சி கல்லிடவே பத்தியத்தை நாட்டக்கேளு; குலத்தாலேமுரு
ங்கக்கா யிலையுமாகுங் கோழியொடு துவரையுமா மூக்குருவியாமே. ()

ஆகாது புளியுப்புக்கசப்புமூன்று அப்பனேபதினேந்துதினம்போ
மட்டும், ஏகாதுபிணிபகலும்வகைனயக்கேளு யெழுமூலங்கருங்குட்ட
மண்டவாதம், போகாத செங்குட்டம் வெண்குட்டங்கள்புருடபிளவை
த்தண்டுகிரந்திப்புண்கள், சாகாத அரையாப்புச் சூலையெல்லாந் தான்
கெட்டோமென்றுபோந்தான்கண்டீரோ, (௨௬௭)

## கருங்கோழிச்சூரணம்வாதத்திற்கு.

கண்டீரோகருங்கோழிச் சூரணங்கான் கனமானகேம்பிளிடப்பட்
டைதன்னை, தண்டாதமேற்பரணிகன்னைத்தள்ளி தாளிடித்துச்சூரண
ம்பலமிருபதப்பா, உண்டான பதினாறுபடிதான் காட்டி யூறவிடுமிருப
துநாள் மட்டும்போட்டு, வண்டானக்கருங்கோழிவயதுமூன்று வாகாக
நற்சேவல் கொண்டாயே. (௨௬௮)

கொண்டிடவேகுடல்தனையும் மயிரும்போக்கிகுணமாககாய்ந்ததனை யுந்தன்னைத்தள்ளி, விண்டிடவேவசுவகெந்தி பலந்தானரண்டுவிரும்பி யேபொடித்துமே தூளதாக்கி, கண்டிடவேகோழிபின்வயற்றினுள்ளே கடினமுடன் தானடைத்துதைத்துமேதான், பிண்டிடவேதாளிதனில டக்கஞ்செய்து பிசகாமல்மலுசட்டி யடக்கிவையே. (௨௯௯)

அடக்கிவைத்து சீலைநன்றாய் செய்துப்போடு அகண்டவாய்த்தா ளிதனில் கட்டித்தூக்கி. கடக்கவைத்த காடிதனை யிறுத்துக்கொண்டு க ருங்கோழிதன்னி லாவிவிட்ட பின்பு,மடக்கவேமேல்மூடிப்பாவேற்றி மைந்தனே யொருசாதிவிறகினாலே, துடிக்கவேயனாப்படியாய்ச் சுண் டிற்றுறாற்சுகமாகயிறக்கி வைத்துக்குளிரவாற்றே. (௩௱)

குளிர்ந்தபின்புயெலும்புதள்ளிச் சதைமருந்து குலாவிநிழலுலர்த் தியிடிச்சூரணமாயப்பா, அளிந்ததை வடிக்கட்டிவேறேவைத்து அப்ப னேபலம்பத்துப் பாக்கிப்பட்டை, களிந்ததனியிடித்துச் சூரணமாய்ச் செய்துகடக்கவைத்து மேல்மருந்துகடுகுஞ்சுக்கும், எளிந்தகருஞ்சீரக மூந்திப்பிலியுமோமம் என்மக்காள்கார்போக மிருளுங்கூடே. (௩௱௧)

கூட்டினது வகைக்கு அனாப்பலமதாகக் கொடிதாகவறுத்துச்சூர ணமேசெய்து, மாட்டுவது மூன்றுவகைச் சூரணமுங்கலந்து வறுத்து நீகருக்காமல்வாங்கிடாறி, நாட்டுவது கலசத்திலடைத்து வைத்துநாளொ ன்றுக்கனாப்பலந்தான்தேனிலுண்ண, ஊட்டுவதுமுப்பதுநாள்கொண் டபோது ஓடுங்காத சூலைகுட்டமோடிப்போமே. (௩௱௨)

ஓடிப்போங்கிரந்தியொடு வாதவாய்வு ஓண்ட வாதமொடு கிரிச்சி னவாய்வு, சாடிப்போம் பத்தியந்தான் புளியுமுப்புந் தள்ளிவிடுகோழி யொடுமுருங்கையாகும், நாடிப்பாரவரையொடுத் துவரையாகுநாள்முப் பத்தேழுக்கு அக்கிசந்தி, தேடிப்பார்விள்ளாதவென்னிர்தானுந் தேகத் தில்தான்விட்டாற் றீருந்தானே. (௩௱௩)

தானென்ற மனச்சூலை யிடிச்சூலை வந்தால்தான் கொள்ளபட்சத்தி ற்சாடிப்போகும், ஊனென்றமற்றுள்ள வியாதிக்கெல்லா முத்தமனே பத்துநாள் மட்டும்போதும், தேனென்றவிழிமடவா ருடன்மருகலக்கா ச்செப்புகிறேனுட்புண்ண வகையைக்கேளு, நானென்ற பிந்துப்பைக் கல்லத்திட்டு காட்டியனைப் பொற்றலைபின்சாற் சாமம்ராண்டே. (௩௱௪

## பத்தியவுப்பு.

சாமமது அறைத்துவில்லைசெய் துலர்த்திச் சலியாமலோட்டில்வை த்துமேலுமுடி, சேமமுடன் சீலைமண்செய் துலர்த்திச் செவ்வென்றபு டம்போடக்கட்டிப்போகும், நாமமிதற்சிறுகவிடுகரிகட் கெல்லாமநல மானபத்தியத்திற் கப்பாசொன்னேன், சேமமுள்ளகடுகுபேதி பத்திய த்திற்காகா நீர்விடாதகன்றுநிலையில்நில்லே. (௬௱௫)

## பாக்கிட்டத்திற்கு வல்லாதி.

நிலையில்லாவிடுப்புவலிதீரச்சேரு லேசானசீனப்பால்பலந்தானொ ரு, மலைவில்லாதிடித்துச்சூரணமேசெய்து வைத்தனே திரிகடுகுவகை தான்மூன்று, பலமேலாமூவைந்து இளமவறுப்பாய்ப் பகருதேசூரண ஞ்செய்துறவேசெய்து, நலமில்லாதிளைத்தவுடல்தனக்கு நெய்யில் நல் குவாய் வாதவுடலோர்க்குத்தானே. (௬௱௬)

தேனொடு நெய்பிலேகொள்ளும்போது திறமாகவெருகடிதான் தெளிந்துபாரு, வேனென்றபத்தியந்தான்பழஞ்சோறுகும விண்டுண் ண நல்லெண்ணெய்பன்றிபாகும், காணொடுவாயுவெச்சறதீனிநள்ளுந்த திரிக்காயாகாது கசப்புமாகா, ஊனொடுகுலையொடுகசப்புவாய்வு உட்கு டைச்சல் வாதத்தின் கசப்புப்போமே. (௬௱௭)

## கருவளர்க்குமெண்ணெய்.

போமென்றகருவழிக்குங்கிரந்திகுலை போகவேகருவளர்க்குமெண் ணெய்சேரு, பாமென்றஅசித்தாத்துமயோண்டத்தெண்ணெய்ப் படி வளைதான்பசுவின்பால்படியுஞ்சாலம், தாமென்றசருள்ளிப்படி யொ ன்றேகால் தானுரித்து அரிந்திட்டுக்கரிடசிரசமு, மாமென்றுபொடிபண் ணுவிராகனிடைரண்டு மாங்கமுதையத்திப்பால் படியுங்காலே. (௬௱௮

காலாகுமிதுவெல்லாமெண்ணெய்சேர்த்துக் கலந்தடுப்பி லேற்றி யெரிசிறுதீபாக, மேலாகுமெழுகுபதமாகும்போது வேகாதுகைகளையபி ட்டா விளம்வெந்நீராம், மாலாகுமபதமென்று வடித்துக்கொண்டு மங் கையர்கள் கெர்ப்பமுற்றஐந்தாந்திங்கள், வேலாகும்விழிமடவார்க்கஞ்சு காளும் விளங்குமேழாந்திங்களேழுக ளே. (௬௱௯)

இங்ஙனதுவொன்பதுக்குமொன்பதேகாள் திறமாக அந்திசந்தி ரண்டுநேரம் பங்கமில்லாதிரிகழுஞ்சி பகரச்சொல்லு பத்தியந்தான்புளி புகையுமுப்புமாகா, பொங்குமுடன்மறுபத்தியமிருக்கச்சொல்லு புண்

ணியனேநீராட்டியுப்பைக்கூட்டு, அக்கமதில்நோய்களுந் தழியுமன்றி
யழகுமாயிருமலுண்டாய்ப்பிறக்குமப்பாரோ. (௫௱௰)

## கரப்பானுக் கெண்ணெய்.

பிறக்குமைந்தர்தங்களுக்குக் கரப்பானெல்லாம் புறம்போகவெண்
ணெயொன்றுபேசக்கேளு, சிறக்குமந்தகற்பூரவல்லிச்சாறு சிறியசெரு
ப்படைச்சாறிருள்ளிச்சாறு, வெறிக்குமந்தரிவிறட்டிசெப்ப, நெரிஞ்சிச்
சாறு விளக்கெண்ணெய்ப்படியொன்றுபடிதானொன்று, பறக்கு மந்தி
மெழுகுபதந்தன்னை வாங்கிப் பாலருக்குக் கொடுத்துடம்பு பூசச்
சொல்லே. (௫௱௰௧)

## மூலவாய்வுக்குப்பால்.

